விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 275 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 03 புதன்கிழமை (20.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## ஐக்கிய நாடுகளின் சபையின் 78வது கூட்டத்தொடர் ஆரம்பமாகியது



(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபையின் 78ஆவது கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமானது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அனைத்து அரச தலைவர்களையும் ஐ.நா சபை 15

## திலீபனின் நினைவேந்தலை எவராலும் தடுக்க முடியாது

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(திருகோணமலை)

"தியாகி" திலீபனின் நினைவேந்தலை எவராலும் தடுக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் திலீபன் நினைவு ஊர்தி மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 15



# திலீபனின் நினைவேந்தலுக்கு கொழும்பில் தடை

## நீதிமன்றங்கள் கட்டளை

(கொழும்பு)

**தியாகி திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகளை கொழும்பில் நடத்துவதற்கு நீதிமன்றங்கள் தடையுத்தரவு பிறப்பித்துள்ளன.**

கொழும்பில் மருதானை, கோட்டை உள்ளிட்ட மேலும் சில பகுதிகளில் தியாக தீபம் திலீபனை நினைவுகூரும் நிகழ்வுகளை நடத்துவதற்கு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும் மருதானை பிரதேசத்தில் நினைவேந்தல்களை நடத்துவதற்கு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றமும் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கோட்டை மற்றும் மருதானை பொலிஸார் நீதிமன்றில் முன் 02



## அல்வாயில் வீடு புகுந்து கொள்ளை

(கரணவாய்)

வாளுடன் வீடு புகுந்த கொள்ளையன் ஒருவன் அங்கிருந்த பெறுமதியான தொலைபேசி ஒன்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக நெல்லியடி பொலி 15

## மிருசுவிலில் வெடி பொருட்கள்

(மிருசுவில்)

மிருசுவில் பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றில் இருந்து வெடி பொருட்கள் 15



## புலிப் பயங்கரவாதி கஜேந்திரனை உடன் சிறையில் அடையுங்கள்

### விமல் வீரவன்ஸ இனவாதம்



(கொழும்பு)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஒரு புலிப் பயங்கரவாதி. அவரை உடனடியாகக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். 15

## மயானத்தில் காணாமல்போன சிறுமியின் சடலத்தை மீள ஒப்படைத்தால் ரூ.20 இலட்சம்

(வவுனியா)

வவுனியா, இராசேந்திரங்குளம் மயானத்தில் புதைக்கப்பட்ட நிலையில் காணாமல் போன சிறுமியின் சடலத்தை மீள ஒப்படைத்தால் 20 இலட்சம் ரூபாய் சன்மானம் வழங்கப்படும் என சிறுமியின் அம்மம்மாவான குணரட்னம் ரோகினி தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில்நேற்று ஊடகவியலாளருக்கு 15

## சமந்தா பவர் ரணில் சந்திப்பு

(நியூயோர்க்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் (USAID) தலைமை அதிகாரி சமந்தா பவரை நேற்று சந்தித் 15

## அதிகார சண்டைக்கு இலங்கைக்கு நாட்டமில்லை

### ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

முக்கிய நாடுகளுக்கிடையிலான அதிகாரச் சண்டைகளில் ஈடுபடுவதற்கு இலங்கை விரும்பவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 15

## இலங்கை தொடர்பான ஆவணப் படத்துடன்

### ஜெனிவா சென்ற சனல் 4

(ஜெனிவா)

'சனல் 4' தொலைக்காட்சியின் தலைவர் மற்றும் அந்த ஊடகத்தின் ஒரு குழுவினர் சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் நடைபெற்றுவரும் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் கலந்து கொள்ள சென்றுள்ளதாக பிரபல சமூக ஆர்வலர் ஷெஹான் மலேகா கமகே தெரிவித்தார்.

சனல் 4 குழுவினர் 02

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடனோ சீனாவுடனோ இலங்கை கூட்டணி அமைக்காது



## நியூயோர்க்கில் ஜனாதிபதி ரணில்

இலங்கை அரசாங்கம் இந்தியாவுடனோ அல்லது சீனாவுடனோ கூட்டணி அமைக்காது என்றும், எல்லாவற்றிற்கும் மேலாக இலங்கை மக்களின் நலன்களையே முன்னிலைப்படுத்திநிற்கும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நியூயோர்க் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற கடல்சார் நாடுகளுக்கான 3 ஆவது இந்து - பசுபிக் தீவு நாடுகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

இந்து-பசுபிக் பிராந்தியத்தில் பெரும் வல்லரசுப் போட்டி நிலவிய போதிலும், இந்து சமுத்திரம் மற்றும் தென் பசுபிக் சமுத்திர தீவு நாடுகளின் சுதந்திரம், அவற்றின் உள்ளக விவகாரங்களில் தலையிடாமை மற்றும் அவர்களின் தனிப்பட்ட உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பிராந்தியத்தின் அனைத்து நாடுகளும் அர்ப்பணிக்க வேண்டும்.

பிரதான உலக வல்லரசுகளுக்கு இடையிலான போட்டியில் தலையிடுவதற்கு, இந்து சமுத்திர மற்றும் தென் பசுபிக் பிராந்தியத்தின் தீவு நாடுகள் விரும்பவில்லை.

இந்த நாடுகள் தமது சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாடு உட்பட அவர்களின் முதன்மையான விடயங்களில் கவனம் செலுத்தி, தமது நாடுகளின் இறைமை மற்றும் சுதந்திரத்தைப் பேண முயற்சிக்கின்றோம்.

அதேபோன்று, பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளும் தமது நாடுகளின் இறைமைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றன.

அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா உள்ளடக்கிய க்வொட் (Quad) நாடுகள் மற்றும், சீனாவின் இலக்குகளுடன் தொடர்பில்லாத இந்து சமுத்திரத்தின் மற்றும் தென் பசுபிக் பிராந்தியத்தின் தீவு நாடுகள் தமது சொந்த முன்னுரிமைகளைக் கொண்டிருப்பதாகவும், அவற்றை மதிக்கத் தயாராக இருக்கும் எந்தவொரு தரப்பினருடனும் ஒத்துழைப்பைக் கட்டியெழுப்ப இலங்கையும் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும் இந்து-பசுபிக் பிராந்தியத்தில் பெரும் வல்லரசுப் போட்டி நிலவிய போதிலும், இந்து சமுத்திரம் மற்றும் தென் பசுபிக் பிராந்தியத்தில் தீவு நாடுகளின் சுதந்திரம், அவற்றின் உள்ளக விவகாரங்களில் தலையிடாமை, அவர்களின் தனிப்பட்ட முன்னுரிமைகளின் பாதுகாப்பதற்காக பிராந்தியத்தின் அனைத்து நாடுகளும் அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## மாணவி வைசாலி மீண்டும் பாடசாலைக்கு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் தவறான சிகிச்சை வழங்கப்பட்டதனால் தனது மணிக்கட்டுடன் கையினை இழந்த மாணவி வைசாலி நேற்று மீண்டும் பாடசாலைக்கு சென்றுள்ளார்.

யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை மாணவியான சாண்டில்யன் வைசாலி (வயது-8) நேற்று மீண்டும் தனது கற்றலைத் தொடர்வதற்காக பாடசாலைக்கு சமூகமளித்த போது வருக்கு சிறப்பான வரவேற்பு வழங்கப் பட்டுள்ளது.

வைசாலி பாடசாலைக்கு சென்ற போது மாணவிகள் அவரை பூங்கொத்து வழங்கி வரவேற்றார்கள். (ம-7.33.104)


### வாகனம் விற்பனைக்கு

படி ரக வாகனம், முழு அலுமினிய பொடியுடன் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

070 521 2138

(17152)


### இலங்கை...

இந்த கூட்டத் தொடருக்கு இணையாக நடைபெறும் கூட்டங்களில் கலந்துகொண்டு குண்டுத் தாக்குதல்கள் குறித்த தகவல்களை இராஜதந்திரிகளுக்கு வெளிப்படுத்த கூடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது அமர்வு ஜெனீவாவில் நடைபெற்று வருகிறது.

இந்த அமர்வில் இலங்கையில் 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சனல் 4 தொலைக்காட்சி அண்மையில் வெளியிட்ட ஆவணப்படம் மீண்டும் இலங்கையில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளதுடன், உலகத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ள. பின்புலத்தில் சனல் 4 குழுவினர் இவ்வாறு ஜெனீவா சென்றுள்ளனர்.

சனல் 4 குழுவினர் இந்த வாரத்தில், இது தொடர்பான சர்ச்சைக்குரிய ஆவணப்படம், ஆதாரங்கள், உண்மைகள் மற்றும் ஏனைய தகவல்களை உலகின் அனைத்து நாடுகளின் இராஜதந்திரிகளுக்கும் வழங்குவார்கள் எனத் தெரியவகிறது.

சனல் 4 குழுவின் கலந்துகொள்ளும் கூட்டங்களில் பல நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளதாக கூறப்படுகிறது. அத்துடன், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைந்துள்ள சிலருக்கு இந்த ஆவணப்படம் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-7)


### விசா விண்ணப்பம்

கனடா பிரான்ஸ் லண்டன்

ஆகிய நாடுகளுக்கு விசிட் விசா, பொன்சர் விசா மற்றும் வேலைவாய்ப்பு விசாக்கள் ஆகிய விசாக்கள் பெற்றுத் தரப்படும். ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்

கனடாவில் வேலைவாய்ப்பு 8 விசாக்கள் மட்டும் கையிருப்பு உள்ளது

முடிவுத்திகதி (23.09.2023)

தொடர்பு : 9.00 am - 6.00 pm

குறிப்பு : அனைத்துத் தகவல்களும் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும் (நிபந்தனைக்குட்பட்டது)

NSA Group of Company (Pvt) Ltd
197, MAIN STREET JAFFNA.
077 266 6429, 021 221 0599
077 877 4838

(17151)


### கொழும்பில்...

வைத்த கோரிக்கைக்கு அமை வாக இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

“ஒடுக்கப்படும் தமிழ் மக்களோடு நிற்போம்” என்ற கோஷத்துடன் கிறிஸ்தவ ஒத்துழைப்பு இயக்கத்தினால் நேற்று பி.ப 3.00 மணிக்கு மருதானையில் அமைந்துள்ள சமய, சமூக நடுநிலையத்தில் திலீபன் நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஏற்கனவே கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை நோக்கிப் பயணித்த திலீபனின் நினைவு ஊர்தி மீதும், அந்த ஊர்தியில் பயணித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மீதும் சர்தாபுர பகுதியில் வைத்து சிலரால் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கடும் கண்டனங்களுக்கு உள்ளாகியிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் நேற்றைய தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நினைவேந்தல் நிகழ்வைக் குழப்பும் வகையில் “முதுகெலும்பு இருப்பவர்கள் ஆயத்தமாகுங்கள். கொழும்புக்கு வருகைதரும் புலிகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்துவோம்” என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதிவுகள் கடந்த இரண்டு நாட்கள் பேஸ்புக், டுவிட்டர் உள்ளிட்ட சமூகவலைத்தளப்பக்கங்களில் அதிகளவில் பகிரப்பட்டன.

அதனையடுத்து திலீபன் நினைவேந்தல் நிகழ்வு தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல் காரணமாகவும், வன்முறைத் தாக்குதல்கள் மற்றும் அநாவசியமான குழப்பங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கிலும் நேற்று மாலை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த நினைவேந்தல் நிகழ்வை இரத்துச் செய்வதாக கிறிஸ்தவ ஒத்துழைப்பு இயக்கம் நேற்று காலை அறிவித்தது.

இது இவ்வாறிருக்க பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை அடுத்து கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் மருதானை, கோட்டை உள்ளிட்ட மேலும் சில பகுதிகளில் திலீபனை நினைவுகூரும் நிகழ்வுகளை நடத்துவதற்குத் தடைவிதித்து உத்தரவு பிறப்பித்தது. (ம-7)


### பதவி வெற்றிடம்

- அலுவலகச் செய்தியாளர்கள் (இருபாலாரும்)
- உதவி ஆசிரியர்கள் (இருபாலாரும்)
- முகாமைத்துவ உதவியாளர்கள் (பெண்கள்)
- பாதுகாப்பு உத்தியோகத்தர்

கல்வித் தகைமை க.பொ.த (உயர் தரம்)

வயது – 24 இற்கு மேல்

ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்க முடியும்

பொது முகாமையாளர்
வலம்புரி

தொடர்பு : 076 097 3121

### வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378
076 097 3127


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஞ்சள் காமாலைக்கான 2000 தடுப்பூசிகள்

### அடுத்த வாரம் நாட்டிற்கு

(கொழும்பு)

அடுத்த வாரம் மஞ்சள் காமாலை நோய்க்கான 2 ஆயிரம் தடுப்பூசிகள் நாட்டிற்கு கிடைக்கப் பெறும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்தியர் விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

மஞ்சள் காமாலை நோய்க்கான தடுப்பூசிகளின் தட்டுப்பாடு காரணமாக கடந்த காலத்தில் சுகாதார அமைச்சு மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும், யுனிசெப் அமைப்பின் உதவியுடன், விரைவில் குறித்த தடுப்பூசிகள் நாட்டிற்கு கிடைக்கப்பெறும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்தியர் விஜேசூரிய குறிப்பிட்டுள்ளார்.

குறித்த தடுப்பூசியினை கொள்வனவு செய்யும் இறக்குமதியாளர்கள் ஒரு சிலரே உள்ளனர்.

இதனால் குறித்த தடுப்பூசிக்கான தட்டுப்பாடு காணப்பட்டது.எனினும், நீண்ட கலந்துரையாடலுக்கு பின்னர், தற்போது குறித்த தடுப்பூசியினை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

குறித்த தடுப்பூசி, ஆபிரிக்க கண்டத்திற்கு செல்லும் இலங்கையர்களுக்கு, செலுத்தப்படவுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்தியர் விஜேசூரிய குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## 31 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

விசா இன்றி குவைத்தில் நீண்ட காலமாக இலங்கைக்கு வரமுடியாமல் தங்கியிருந்த 31 இலங்கையர்கள் இலங்கை தூதரகத்தின் தலையீட்டால் தற்காலிக விமான அனுமதியின் கீழ் நேற்று செவ்வாய்க்கிழமை காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். (நி-5)

## 45 லட்சம் பெறுமதியான சிகரெட்டுகள் பறிமுதல்

(கொழும்பு)

சட்டவிரோதமாக வெளிநாட்டு சிகரெட்டுகளை இலங்கைக்கு கொண்டு வந்த இரு வர்த்தகர்களை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைதுசெய்துள்ளனர்.

சுமார் 45 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான 45, 400 வெளிநாட்டு சிகரெட்டுகளை சுங்க அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் யட்டியாந்தோட்டையைச் சேர்ந்த பெண்ணும் மற்றையவர் கல்முனையைச் சேர்ந்த ஆணும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் அடிக்கடி விமானம் மூலம் வெளிநாட்டில் இருந்து பொருட்களை கொண்டு வந்து இலங்கையில் விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டு, ஆண் நபருக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் பெண் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார். (நி-5)

# நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டத்திற்கு உலக வங்கி முழு ஆதரவை வழங்கும்

## உலக வங்கியின் தலைவர் உறுதிமொழி

**(நியூயோர்க்)**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான பொருளாதார மற்றும் சமூக மறுசீரமைப்பு வேலைத் திட்டங்களை வெகுவாகப் பாராட்டிய உலக வங்கியின் தலைவர் அஜய் பங்கா அந்த முயற்சிகளுக்கு உலக வங்கியின் முழுமையான ஒத்துழைப்பு கிட்டும் என்றும் உறுதியளித்தார்.**



ஐக்கிய நாடுகள் சபையின் 78 ஆவது அமர்வில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் உலக வங்கியின் தலைவர் அஜய் பங்காவுக்கும் இடையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந்த விசேட சந்திப்பின் போதே உலக வங்கித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒக்டோபர் மாத இறுதியில் சர்வதேச நடவடிக்கைகளுக்காக இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சுற்றுலாத்துறைக்கு முன்னுரிமை அளித்து பொருளாதாரச் மறுசீரமைப்புக்காக மேற்கொண்டுள்ள அணுகுமுறையானது சாதகமானது என சுட்டிக்காட்டிய அவர் தற்போதைய நிலைமையில் இலங்கைக்கு அதுவே மிகவும் பொருத்தமானது என்றும் தெரிவித்தார்.

உலகக் கப்பல் பாதையின் மத்தியஸ்தானமாக விளங்கும் இலங்கையின் புவியியல் அமைவிடம் தனித்துவமானது. அதனால் பொருளாதார அனுகூலங்களைப் பெறுவதற்கு துறைமுக வர்த்தகம் மற்றும் கடல்சார் நடவடிக்கைகளையும் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

இலங்கையின் டிஜிட்டல் மயமாக்கல், காற்றாலை சூரியசக்தி மற்றும் கல்வித்துறை உட்பட புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறைக்கு உலக வங்கி ஆதரவளிக்கும் என்றும் தெரிவித்தார்.

மேலும் அமைச்சுகள் மற்றும் அரச நிறுவனங்களை டிஜிட்டல் மயமாக்கும் வேலைத்திட்டங்கள் வெளிப்படைத் தன்மை மிக்கதாக திறம்பட முன்னெடுக்க வேண்டுமென உலக வங்கியின் தலைவர் தெரிவித்ததோடு, அந்த மாற்றங்களை செய்யும் போது ஆசிரியர்கள் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் தடையேற்படுத்த முற்படலாம் என்றும் தெரிவித்தார். (நி-5)

# திலீபனின் நினைவூர்திப் பேரணி இனங்களிடையே குரோதத்தை ஏற்படுத்தும்

## கொந்தளிக்கிறார் கம்மன்பில



(கொழும்பு)

திலீபனின் நினைவூர்தி பேரணி என்பது இனவாதத்தையும் மக்கள் மத்தியில் குரோதத்தையும் ஏற்படுத்தும் சதித்திட்டமாகும் என பிவிதுறு ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நினைவூர்திப் பேரணி தொடர்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இவ்வாறு கூறிய அவர், காடையர்களின் தாக்குதலை நியாயப்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "திலீபன் என்பவர் யார்? நாட்டை பிளவுபடுத்தும் விடுதலைப் புலிகள் அமைப்பின் முயற்சிக்கு தலைமை தாங்கியவர்.

பிரிவினைவாதத்தையும் தீவிரவாதத்தையும் நாட்டில் பரப்பும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நோக்கத்திற்காக தமது உயிரை பலி கொடுத்த ஒருவராவார்.

விடுதலைப் புலிகள் இயக்கம் என்பது இந்த நாட்டில் தடை செய்யப்பட்ட இயக்கமாகும்.

சிவப்பு மஞ்சள் கொடிகளால் வாகனம் ஒன்றை அலங்கரித்து அதில் திலீபனின் பாரிய நிழற்படம் ஒன்றை வைத்துக் கொண்டு கிழக்கில் இருந்து வட மாகாணத்திற்கு வாகனப் பேரணி ஒன்றை மேற்கொள்வதற்கு யார் அனுமதி கொடுத்தது?

எவரேனும் ஒரு உத்தியோகத்தர் அதற்கு அனுமதி வழங்கியிருப்பாராயின் அவர் இலங்கை அரசியலமைப்பின் 157 சரத்தை முழுமையாக மீறி பிரிவினைவாதத்தை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

மூன்று தசாப்தங்களாக விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண சிங்கள மக்களின் கிராமங்களூடாக இவர்கள் பயணித்தமை கட்டாயமாக இனவாதத்தையும் மக்கள் மத்தியில் குரோதத்தையும் ஏற்படுத்தும் சதித்திட்டமாகும்.

2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனத்தின் 3ஆவது சரத்தின் கீழ் இனவாதம், மக்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தி குரோதத்திற்கு வித்திடும் அனைத்து நடவடிக்கைகளும் தண்டனைக்குரிய குற்றமாகும். அரசாங்கம் உடனடியாக இந்த இரண்டு விடயங்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்த சந்தர்ப்பங்களில் மாத்திரமே எப்போதும் பிரிவினைவாதிகளும் கடும்போக்கு வாதிகளும் எழுச்சி பெறுகின்றனர்.

தொழிற்சங்கங்கள், மாணவர் அமைப்புகள், பொதுமக்கள் பேரணிகளை முன்னெடுக்கும் போது தடை உத்தரவு பெறுகின்ற இந்த அரசாங்கம், பிரிவினைவாதம், பயங்கரவாதம், இனவாதத்தைப் பரப்பும் பாரிய பேரணி என்பவற்றை ஏன் தடுக்கவில்லை என நாம் கேள்வி எழுப்புகிறோம்"என அவர் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகில இலங்கை பாடசாலை ரீதியிலான பளுதூக்கல் போட்டி அண்மையில் பொலநறுவை ராஜகிரிய வித்தியாலயத்தில் நடைபெற்றது.

குறித்த போட்டியில் வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய மாணவிகளான ரி.கௌசியா 17 வயதுப்பிரிவில் 45 கிலோ எடை பிரிவில் 95 கிலோ எடை தூக்கி 1 ஆம் இடத்தையும் ஏ.கவிஜினி அதே பிரிவில் 81 கிலோ எடை பிரிவில் 78 கிலோ எடை தூக்கி 2 ஆம் இடத்தையும் ஆர்.தரண்ஜா 20 வயதுப்பிரிவில் 87கிலோ எடை பிரிவில் 97 கிலோ எடை தூக்கி 4 ஆம் இடத்தையும் வவுனியா பெரிய கோமரசங்குள மகா வித்தியாலய பாடசாலை மாணவிகள் 20 வயதுப்பிரிவில் பங்குபற்றி பி.மேரி அசெம்ரா 55 கிலோ எடை பிரிவில் 77 கிலோ எடை தூக்கி 3 ஆம் இடத்தையும் பா.கிசாளனி 49 கிலோ எடை பிரிவில் 65 கிலோ எடை தூக்கி 6 ஆம் இடத்தையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

(படங்கள்:-சதீஸ்)

# ஐ.சி.சி ஒருநாள் தரவரிசையில் மீண்டும் முதலிடம் பிடித்த பாகிஸ்தான்

ஆசிய கிண்ணம் மற்றும் தென்னாபிரிக்கா-அவுஸ்திரேலியா தொடர் முடிவடைந்துள்ள நிலையில் ஐ.சி.சி ஒருநாள் அணிகளுக்கான தரவரிசையில் பாகிஸ்தான் அணி மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளது.

தென்னாபிரிக்கா அணியுடன் இடம்பெற்ற ஒருநாள் தொடரை அவுஸ்திரேலிய அணி இழந்த நிலையில் பாகிஸ்தான் அணி மீண்டும் முதலிடத்திற்கு திரும்பியுள்ளது.

இலங்கைக்கு எதிரான ஆசிய கிண்ண இறுதிப் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றாலும் தற்போது ஒருநாள் தரவரிசையில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.

தற்போது. ஐ.சி.சி ஒருநாள் தரவரிசையில் பாகிஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய இரு அணிகளும் 115 புள்ளிகளைப் பகிர்ந்து கொள்கின்றன.

இருப்பினும், பாகிஸ்தான் தசம புள்ளிகளில் முதலிடத்தில் உள்ளது. அவுஸ் திரேலிய அணி தரவரிசையில் 113 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திற்கு பின் தள்ளப்பட்டுள்ளது. மேலும் ஒருநாள் சர்வதேச தரவரி சையில் இலங்கை அணி எட்டாவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ரசிகர்களை ஏமாற்றியது வருத்தமளிக்கிறது- ஷானகா



ஆசியக் கோப்பையில் தோல்வியடைந்ததற்கு ரசிகர்களிடம் இலங்கை கப்டன் தசுன் ஷானகா மன்னிப்பு கேட்டுள்ளார்.

இந்தியா அணிக்கு எதிராக நடந்த ஆசியக் கோப்பை இறுதிப் போட்டியில் இலங்கை அணி படுதோல்வியடைந்தது.

இந்நிலையில் போட்டி முடிந்ததும் பேசிய இலங்கை கப்டன் தசுன் ஷானகா தோல்வி குறித்து விளக்கம் அளித்ததுடன். ரசிகர்களிடம் மன்னிப்பும் கோரியுள்ளார்.

“இது துடுப்பாட்ட வீரர்களுக்கு ஒரு நல்ல ஆடுகளமாக இருக்கும் என்று நான் நினைத்தேன். ஆனால், மேகமூட்டமான சூழ்நிலைகள் ஒரு பகுதியாக விளையாடி விட்டது. எங்களுக்கு இது கடினமான நாள்.

ஆனால். கடினமான சூழ்நிலைகளில் இருந்து எப்படி மீள்வது என்பது எங்களுக்கு தெரியும்.

கடந்த 2 ஆண்டுகளாக விளையாடிய நல்ல கிரிக்கெட்டை நம் வீரர்கள் தொடர்வார்கள். திரளாக வந்து ஆதரவு அளித்தவர்களுக்கு நன்றி. நாங்கள் உங்களை ஏமாற்றியதற்கு மன்னிக்கவும். மேலும். இந்திய அணிக்கு வாழ்த் துக்கள்“ என தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2917

### ராகவி

வெள்ளை புடவை கட்டியிருந்தா பேய் னு சொல்றாங்க...



வெள்ளை கவுண் போட்டிருந்தா தேவதை னு சொல்றாங்க...

### தனுஷா

பிள்ளையை ஏண்டி இப்படிப் போட்டு அடிக்கிறாய்...?



பின்ன என்னாங்க... நல்லா படிச்சு பெரிய ஆளானா நல்ல Wife கிடைப்பா என்று சொன்னா... அப்பா ஏம்மா நல்லாப் படிக்கலை என்று கேக்கிறான்...

### கபில்

ஒரு ஆனும் பெண்ணும் சிரிச்சுப் பேசினால் உடனே காதலர்களாகத்தான் இருக்கனுமா டாக்கர்?



அதெல்லாம் எனக்குத் தெரியாது. நிச்சயமா கணவன்-மனைவியா இருக்க முடியாது அது உறுதி.

### மீனாட்சி

சிக்னல் போட்டதும் பறந்துட்டே போனியே அப்படி போய் என்னதான் பண்ண போறாய்...?



அடுத்த சிக்னல்ல முதல் ஆளா நிற்பேன்....

### டிறன்சியா




### ஆன்ரனி

உன்னோட அப்பா என்ன வேலை செய்கிறார்?




எங்க அம்மா சொல்லுற எல்லா வேலையும் செய்வார் சேர்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில்-தென்கொரிய ஜனாதிபதி நியூயோர்க்கில் சந்திப்பு



(கொழும்பு)

பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவின் செயற்றிட்டத்திற்கு ஆதரவளிப்பதாக தென்கொரிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளுக்கான தென்கொரிய நிரந்தர வதிவிட தூதுக்குழு அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார். (நி)

# மந்தகதியில் தொடருகிறது இலங்கையின் பொருளாதாரம்

(கொழும்பு)

இவ்வாண்டின் இரண்டாவது காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் 3.1 வீதம் சுருங்கியுள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டுடன் ஒப்பிடுகையிலேயே இவ்வாறு குறைவடைந்துள்ளது. 2022ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில், இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2,683, 374 மில்லியன் ரூபாவாகும் என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இது இந்த வருடத்தின் இரண்டாவது காலாண்டில் 2,597,441 மில்லியன் ரூபாவாக குறைவடைந்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-5)

## யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

## பதவி வெற்றிடம்

19.09.2023 நேற்றைய வலம்புரிப் பத்திரிகையின் 07 ஆம் பக்கத்தில் வெளியான யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் பதவி வெற்றிட விளம்பரத்தில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி: அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகைமையில்

**"இ" பகுதியில் கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி** என்பதற்குப் பதிலாக "கூட்டுறவு ஊழியர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி" என தவறுதலாக பிரசுரிக்கப்பட்டு விட்டது. எனவே அதனை மேற்கண்டவாறு திருத்தி வாசிக்கவும்.

**செயலாளர்,**
**யாழ்.மாவட்ட சி.க.கூ.ச.சமாசம்,**
**யாழ்ப்பாணம்.**

(சி-7287)

## விலைக் கேள்விக்கான கோரல் (2023/01)
## வலயக் கல்வி அலுவலகம், முல்லைத்தீவு

1. வலயக் கல்வி அலுவலக பிராந்திய பெறுகைக் குழுவின் தவிசாளர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைக் கேள்விகளைக் கோருகின்றார்கள். மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG) திட்டத்தின் கீழ் இத்திட்டம் நிதியளிக்கப்படும்.
2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். (பொது நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020 & 03/2020 (i) ஆம் இலக்க 09.10.2020 & 11.01.2021 ஆம் திகதிய சுற்றறிக்கைகள் வலுவிலிருக்கும்.
3. விலைக்கேள்வியாளர்கள். நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (SBD iii) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. அக்கறை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர்கள். கீழே 6 இல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன். அம்முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களில் பூரணமான தொகுதியொன்றை வலயக் கல்வி அலுவலகம் முல்லைத்தீவு.(தொலைபேசி இல: 021 229 0015. தொலைநகல் 021 229 0017) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பத்தினை 20.09.2023-04.10.2023 காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரை சமர்ப்பித்து கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம்.பிரதி) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதியில் மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தவிசாளர். பிராந்தியப் பெறுகைக்குழு. வலயக் கல்வி அலுவலகம். முல்லைத்தீவு. எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள். அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் மாநாட்டு மண்டபம். வலயக் கல்வி அலுவலகம். முல்லைத்தீவு. என்னும் முகவரியில் 25.09.2023 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. ஏலம் திறக்கப்பட்டதிலிருந்து ஏலங்கள் செல்லுபடியாகும் நாட்கள் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கேள்வி ஆவணம் வழங்கும்/பெற்றுக்கொள்ளும் காலம் | | | 20.09.2023 முதல் 04.10.2023 வரை | | | | | |
| | கேள்வி தொடர்பான முதற் கூட்டம் | | | 27.09.2023 அன்று மு.ப 10.00 | | | | | |
| | கேள்வி மூடுதல்/திறத்தல் | | | 05.10.2023 அன்று மு.ப 11.30 | | | | | |
| கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) வரி நீங்கலாக | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | மீளளிக்கப்படாத தொகை | செல்லுபடியாகும் காலம் | கேள்விப் பிணைவிபரம் | | |
| | | | | | | | தொகை | தேவைப்படும் காலம் | |
| NP/MU/2023/PSDG/ZONEI | வலயக்கல்வி அலுவலக தங்குமிடம் திருத்த வேலை (மிகுதி வேலை) | 1.70 | 60 நாட்கள் | C9 அல்லது C8 (கட்டடங்கள்) | 1500.00 | 49 நாட்கள் | 17,000.00 | 21.12.2023 | |

**தவிசாளர், பிராந்தியப் பெறுகைக்குழு,**
**வலயக் கல்வி அலுவலகம், முல்லைத்தீவு.**

(7286)


# இராசிபலன்

20.09.2023
புரட்டாதி 03, புதன்கிழமை
பஞ்சமி முற்பகல் 11.30 மணிவரை


விசாகம் பிற்பகல் 1.13 மணிவரை
சுபநேரம் -4.33-6.03 மணிவரை
இராகுகாலம்-12.03-1.33 மணிவரை
சஷ்டி விரதம், சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்- அச்சுவினி, பரணி.


**வளவன்**


மேஷம்


இறைவழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, கொடுக்கல்- வாங்கல்களில் கவனம் தேவை.


கடகம்

தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம்.


துலாம்

வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், புதிய பதவிகளும் பொறுப்புக்களும் வந்து சேரலாம், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.


மகரம்


பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்.


ரிஷபம்


ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.


சிம்மம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வாகன யோகத்தில் வளம் காணும் நாள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், சுப விரயங்கள் கூடும் நாள்.


விருச்சிகம்

குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், வழிபாடு குதூகலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கும்பம்

நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கூடும், எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.


மிதுனம்

கூட்டுத்தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கலாம், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், போசன சுகமுண்டு.


கன்னி

குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், உறவினர்கள் உங்களின் நலனில் அதிக அக்களை காட்டுவர், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.


தனுசு

திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் காணும் நாள்.



மீனம்

அன்பால் சாதித்துக் காட்டும் நாள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பாக்கிகள் வந்து சேரலாம்.

**மனத்தை வென்றவன் மரணத்தைக் கண்டு பயப்பட மாட்டான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோர்வே தேர்தலில் வெற்றியீட்டிய ஈழத்தை சேர்ந்த தந்தை-மகள்



(ஒஸ்லோ)

ஒஸ்லோ தேர்தலில் இலங்கையை பூர்வீகமாக கொண்ட தந்தையும் மகளுமான அனீஸ் ரவூப், தமீனா ஷரீப்டீன் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணம் சோனகத் தெருவைச் சேர்ந்தவர்களாவர். தந்தையும் மகளும் இருவேறு பிரதான கட்சிகளின் சார்பில் தேர்தலில் முறையே கொன்சர் வேட்டிவ் கட்சியிலும் தொழிலாளர் கட்சியிலும் போட்டியிட்டு வென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவனான அனீஸ் ரவூஃப் - சமூக மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர் என்பதுடன், வடமாகாண முஸ்லிம்கள் நிலைமைகள் குறித்து ஜெனிவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் அமைப்பில் யாழ். புலம்பெயர்ந்த முஸ்லிம் போரம் சார்பில் தலைமை தாங்கி பங்குபற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-6)



கனடா செந்தில்குமரன் நிவாரண நிதியத்தின் நிதி ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று குடும்பங்களுக்கான 8,35,000 ரூபா பெறுமதியான நிலையான வாழ்வாதார உதவியும் மன்னாரைச் சேர்ந்த சிறுநீரக நோயாளி ஒருவரின் மருத்துவச் செலவுக்கான உதவித்தொகையாக பன்னிரெண்டு இலட்சத்து மூவாயிரம் ரூபா பெறுமதியான உதவி அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (படம்: சதீஸ், தேவானந்தம்)

# இலவச கண்புரை சத்திரசிகிச்சை முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களை இனங்கண்டு அவர்களுக்கான கண்புரை சத்திரசிகிச்சையினை யாழ்.போதனா வைத்தியசாலையில் முற்றிலும் இலவசமாக மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசிக்கும் கண்புரை சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண்பரிசோதனை முகாம் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிதொடக்கம் யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் (இந்துவிடுதி) இடம்பெறவுள்ளது.

அதேபோன்று நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினைச் சேர்ந்த கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச மருத்துவ முகாமும் அதே திகதியன்று காலை 9 மணி தொடக்கம் அரியாலை நாவலடி ஆரம்ப சுகாதார நிலையத்திலும் நடைபெறவுள்ளது.

குறித்த முகாமில் கண்புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் திகதி பின்னர் அவர்களுக்குஅறியத்தரப்படும்.

எனவே கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் மேற்படி பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்களது பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (நி-6)

# போலித்தாளுடன் கைது

(தருமபுரம்)

தருமபுரத்தில் போலித்தாளுடன் வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வர்த்தக நிலையம் ஒன்றில் பொருள் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட பணத்தில்5000 ரூபாய் போலித்தாள் ஒன்று இருப்பதை அவதானித்ததையடுத்து பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் அந்நபரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

பல பகுதிகளில் போலித்தாள்கள் பயன்பாட்டில் இருப்பதாக தமக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் எனவே வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் மிகுந்த அவதானத்துடன் பணம் கொடுக்கல் -வாங்கல் மேற்கொள்ளுமாறு தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க தெரிவித்துள்ளார். (நி-6-316)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா வைபவம் நாளை 21 ஆம்திகதிகாலை 8.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழா பாடசாலை அதிபர் எஸ்.வேலழகன் தலைமையில் இடம்பெறவுள்ளதோடு பாடசாலையின் லண்டன் பழைய மாணவ சங்கத் தலைவரும் பட்டையக் கணக்காளருமான எம்.திருவாசகம் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (நி-6)



யா/கோண்டாவில் றோ.க.த.க பாடசாலையின் அதிபர் க.நித்தியானந்தன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவிக்கு துவிச்சக்கர வண்டி வழங்கி வைக்கப்பட்டது.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 200 | 180 | 240 |
| உருளைக்கிழங்கு | 220 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 400 | 450 |
| தக்காளி | 160 | 160 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| கோவா | 160 | 120 | 150 | 160 |
| கரட் | 350 | 280 | 300 | 300 |
| பூசணி | 80 | 80 | 80 | 80 |
| புடோல் | 80 | 80 | 100 | 200 |
| வாழைக்காய் | 200 | 180 | 200 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 260 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | 160 | 200 |
| பாகற்காய் | 350 | 400 | 350 | 400 |
| வெண்டக்காய் | 100 | 100 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 160 | 200 |
| பயற்றங்காய் | 150 | 150 | 200 | 200 |
| லீக்ஸ் | 160 | 140 | 180 | 160 |
| பீற்றூட் | 140 | 160 | 150 | 160 |
| கறிமிளகாய் | 250 | 300 | 250 | 320 |
| முருங்கைக்காய் | 100 | 150 | 100 | 120 |
| போஞ்சி | 380 | 500 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 180 | 200 |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 80-150 | 120 |
| தேசிக்காய் | 1000 | 1000 | 1200 | 1500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70-90 | 60-90 |
| இராசவள்ளி | 350 | 400 | 450 | 400 |
| வெங்காயப்பூ | 250 | 280 | -- | 400 |
| முள்ளங்கி | 80 | 80 | -- | 160 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 100 | 60 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 80 | 50 | 140 |

அரியாலை கிழக்கு ஸ்ரீமுத்து விநாயகர் கோயில்

## கூறுவிலை கோரல்

எமது கோயில் மகா கும்பாபிஷேகம் 2024 ஆம் ஆண்டு நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. நடைபெறவுள்ள திருப்பணி வேலைகளுக்கான கூறுவிலை கோரப்படுகின்றது.

கூறுவிலை சமர்ப்பிக்கப்படவுள்ளோர் எதிர்வரும் 28.09.2023 இற்கு முன்னர் சமர்ப்பிக்கவும். திருப்பணி வேலைகளின் விபரங்களை நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

(17148)

தலைவர்

077 951 1301

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் ஆண்டுதோறும் வழங்கப்படும் பசுமை அமைதி விருதுகளுக்குரிய சூழல் பொது அறிவுப் பரீட்சைகள் எதிர்வரும் மாதம் 28 ஆம் திகதி ஆரம்ப மாகவுள்ளதால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் முதலாம், இரண் டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு சூழ லியல் ஆசான் க.சி.குகதாசன் ஞாபகார்த்த தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வழங் கப்படவுள்ளன. எதிர்வரும் மாதம் 15 ஆம் திகதி விண்ணப்ப முடிவுத் திகதியாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடந்தால்

# கண்டியில் எங்கள் மீது தாக்குதல் நடக்கும்

## மனம் திறந்தார் முத்தையா முரளிதரன்



**“யாழ்ப்பாணம் எப்போதுமே யுத்தக்களமாகத்தான் இருக்கும். அங்கே இலங்கை இராணுவத்தின் மீது ஏதாவது தாக்குதல்கள் நடந்தால் பதிலுக்கு கண்டியில் வாழும் எங்கள் மீது தாக்குதல் நடக்கும். நாங்கள் அடி வாங்குவோம். அது ஒரு பயங்கரமான சூழலாகத்தான் இருந்தது.”**

“வாருங்கள்... வாருங்கள்...” என வாஞ்சையோடு அழைத்து சோபாவில் அமர வைத்தார் முத்தையா முரளிதரன். அசகாய பட்ஸ்மேன்களை அசால்ட்டாக வீழ்த்தியவரின் முகத்தில் இப்போது புதிதாக ஒரு பரபரப்பு இருப்பதைக் காண முடிந்தது. காரணம், ‘800’ திரைப்படம். முத்தையா முரளிதரனின் வாழ்க்கையை முழுமையாகப் பதிவு செய்யும் பயோபிக் இது. படத்தின் விளம்பர நிகழ்வுகளுக்காக சென்னை வந்திருந்தவரை தனியாக சந்தித்து உரையாடும் வாய்ப்பு கிடைத்தது.

“வெங்கட் பிரபுவும் என் மனைவியும் சிறுவயது நண்பர்கள். ஒருநாள் என் வீட்டிற்கு வெங்கட்பிரபு வந்திருந்தார். அதுதான் இந்தப் படத்தின் தொடக்கப்புள்ளி” என ‘800’ திரைப்படம் தொடங்கப்பட்ட கதையை விபரிக்க ஆரம்பித்தார் முரளிதரன்.

“1995 காலகட்டத்துல இலங்கையில நிறைய பிரச்சினைகள் நடந்துக்கிட்டு இருந்துச்சு. அந்தச் சமயத்துலதான் நானும் இலங்கை அணிக்காக ஆடிக்கிட்டிருந்தேன். எல்லா மக்களும் எந்த வேறுபாடும் இல்லாமல் என்னை ஆதரித்தார்கள். இலங்கை மக்களுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என நினைத்தேன். சிலருடன் இணைந்து ‘நற்குண மன்றம்’ என்கிற அமைப்பைத் தொடங்கி மக்களுக்குத் தேவையான வாழ்வாதார உதவிகளைச் செய்து வருகிறேன். சுனாமி வந்த போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு 1,000 வீடுகளை எங்கள் அமைப்பு மூலம் கட்டிக் கொடுத்தோம். நாடு முழுவதும் உதவி மைய்யங்களை அமைத்து இயன்றவற்றை செய்து வருகிறோம்.

வெங்கட்பிரபு என் வாழ்க்கை வரலாற்றைப் படமாக்க வேண்டும் என அணுகிய போது எனக்கு அதில் பெரிதாக உடன்பாடில்லை. ஆனால் இந்தப் படத்தின் மூலம் வரும் வருவாயை நற்குண மன்றத்திற்குப் பயன்படுத்தலாம் என உடனிருந்தவர்கள் சொன்னார்கள். அதனால் மட்டுமே ஒப்புக் கொண்டேன். ‘என் பெருமையைப் பேசும் படமாக இல்லாமல் உண்மையைப் பேசும் படமாக இருக்க வேண்டும்’ என்றேன். வெங்கட்பிரபுவின் உதவி இயக்குநர் ஸ்ரீபதியே நிறைய ஆய்வு செய்து எனக்கே தெரியாத பல சம்பவங்களுடன் கதை எழுதி வந்தார். இப்படித்தான் ‘800’ தொடங்கியது.”

**“2009 இற்கு முந்தைய இலங்கை... 2009 இற்குப் பிறகான இலங்கை... எப்படியிருக்கிறது மாற்றம்?”**

“இலங்கையின் பிரச்சினை என்பது நான் பிறப்பதற்கு முன்பாகவே தொடங்கிவிட்டது. 1956 இல் தொடங்கிய பிரச்சினை 1983 இல் பெரிய கலவரமாக வெடித்தது. என் அப்பா ஒரு பிஸ்கட் கம்பெனிதான் நடத்திக் கொண்டிருந்தார். எங்களின் ஏஜெண்டுகள் தமிழர்கள் வாழும் பல பகுதிகளிலும் இருந்தார்கள். ஆக, யாழ்ப்பாணத்திலும் எனக்கு நிறைய நண்பர்கள் உண்டு. அங்கே அவர்களின் வீட்டிலேயே பல நாட்கள் விளையாடித் திரிந்ததெல்லாம் இன்னும் ஞாபகம் இருக்கிறது.

ஆனால், மோதல்கள் பெரிதாகப் பெரிதாக எங்களால் அங்கே செல்ல முடியவில்லை. நாங்கள் கண்டியில் வசித்தோம். யாழ்ப்பாணம் எப்போதுமே யுத்தக்களமாகத்தான் இருக்கும். அங்கே இலங்கை இராணுவத்தின் மீது ஏதாவது தாக்குதல்கள் நடந்தால் பதிலுக்கு கண்டியில் வாழும் எங்கள் மீது தாக்குதல் நடக்கும்.

நாங்கள் அடி வாங்குவோம். அது ஒரு பயங்கரமான சூழலாகத்தான் இருந்தது. ஆனால் என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். 2009 யுத்தத்துக்குப் பிறகு இந்தத் தமிழர் - சிங்களவர் பிரச்சினையால் ஒரு உயிரைக் கூட இழக்கவில்லை. 2019 இல் ஒரு வெடிகுண்டு விபத்து நிகழ்ந்தது. ஆனால் அதற்கான காரணங்கள் வேறு. என்னால் இப்போது கிளிநொச்சி, ஓமந்தை உட்பட பல வடகிழக்குப் பகுதிகளுக்கும் செல்ல முடிகிறது. எங்களுடைய மையங்களும் அங்கே இருக்கின்றன. மக்கள் இயல்பாகி விட்டார்கள். நலமாக இருக்கிறார்கள். அரசியல்வாதிகளைப் பற்றி எனக்குத் தெரியாது.”

**“நீங்கள் போராளிக்குழுத் தலைவர் ஒருவரை சந்திப்பதைப் போல படத்தில் காட்சியிருக்கிறது. அவர் பிரபாகரன்தானே?”**

“அவர் பிரபாகரன் இல்லை. அந்த நடிகரின் சாயல் மற்றும் காட்சியின் சூழலால் உங்களுக்கு அப்படித் தோன்றியிருக்கலாம். நான் பிரபாகரனை சந்தித்ததே இல்லை. ஆனால் அவர் குழுவினரையும் அவருக்கு அடுத்தகட்டத்தில் இருப்பவர்களையும் சந்தித்திருக்கிறேன். அதுதான் நீங்கள் சொல்லும் அந்தக் காட்சி. 2002 சமயத்தில் ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பின் தூதுவராக இருந்தேன். அந்தச் சமயத்தில் வடகிழக்குப் பகுதிகளுக்குச் சென்று பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. சுனாமியின் போது இலங்கையின் மற்ற பகுதிகளுக்குக் கிடைத்த உதவிகள், ஈழத்தமிழர்கள் வாழும் பகுதிகளுக்குக் கிடைக்கவில்லை. அந்தச் சமயத்தில் அரசுக்கும் போராளிகளுக்கும்ஒரு அமைதிஒப்பந்தம்கையெழுத்தாகியிருந்தது.

அதனால், தமிழர்கள் வாழும் பகுதிகளுக்கு என்னால் உதவிகளைக் கொண்டு சேர்க்க முடிந்தது. அந்தச் சமயத்தில் இரண்டு மூன்று முறை கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைமையகத்திற்கு ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பின் நிர்வாகிகளோடு சென்றிருக்கிறேன். நான் சென்ற சமயங்களில் பிரபாகரன் அங்கில்லை. மற்றவர்களுடன்தான் உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. இந்த யுத்தத்தைப் பற்றி, பிரச்சினைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள எனக்கும் சில கேள்விகள் இருந்தன. அதையெல்லாம் அவர்களிடம் கேட்டேன். டிரெய்லரில் நீங்கள் பார்த்த காட்சி அதுதான்.”

**“முதலில் விஜய்சேதுபதி இந்தப் படத்தில் நடிப்பதாக இருந்ததே?”**

“ஆம், முதலில் விஜய்சேதுபதிதான் என் கதாபாத்திரத்தில் நடிப்பதாக இருந்தார். ஆனால், படம் தொடங்குவதற்கு முன்பாகவே ஏகப்பட்ட சர்ச்சைகள். விஜய்சேதுபதி மிகச் சிறந்த நடிகர். தமிழ்நாட்டிற்கே பெருமை தேடித் தந்து கொண்டிருக்கிறார். அப்படியானவர் எந்தப் பிரச்சினைக்கும் சிரமத்துக்கும் உள்ளாவதில் எனக்கு உடன்பாடில்லை. அதனால் நானே அவரைப் படத்திலிருந்து விலகிக் கொள்ளச் சொல்லிவிட்டேன். விஜய்சேதுபதிக்கு பதிலாக மாதுர் மிட்டல் என்னுடைய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். இதுவரை மொத்தமாகவே மூன்று முறைதான் அவரைச் சந்தித்திருப்பேன். ‘பதற்றப் படாதீங்க. என்னைப் போன்றே அப்படியே இமிடேட் செய்ய வேண்டும் என நினைக்காதீர்கள். இயக்குநர் சொல்வதைக் கேட்டு உங்களின் திறமையை வெளிக்காட்டுங்கள்” என்றேன். அவ்வளவுதான். படக்குழுவே எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டார்கள். மிட்டல் அருமையாகச் செய்திருக்கிறார்.”

**“அவுஸ்திரேலிய சுழல் ஜாம்பவான் ஷேன் வார்னேவின் மறைவு யாரும் எதிர்பார்க்காதது. உங்களின் சமகால வீரரான அவரைப் பற்றி?”**

“அவரின் மரணம் எனக்கும் அதிர்ச்சி தந்தது. விளையாட்டு வீரர்கள் என்றால் எப்போதுமே ஃபிட்டாக, ஆரோக்கியமாக இருப்பார்கள் என நினைக்கிறீர்கள். அதில் உண்மையில்லை. எவ்வளவு ஃபிட்டாக இருந்தாலும் மரபணு வழி வரும் பாதிப்புகளைத் தவிர்க்க முடியாது. ஜெயசூர்யா இதயத்தில் மூன்று ஸ்டென்ட் வைத்திருக்கிறார். அவரைப் பார்த்து பயந்து போய் நானும் கொலஸ்ட்ராலுக்காக மருந்துகள் சாப்பிட்டேன்.

ஆனால் பலனில்லை. ஒன்றரை வருடத்திற்கு முன் நானும் மூன்று ஸ்டென்ட் வைத்திருக்கிறேன். மஹேலா ஜெயவர்த்தனேவும் கொலஸ்ட்ராலுக்கு சிகிச்சை எடுத்து வருகிறார். ஆக விளையாட்டு வீரரோ இல்லையோ, 40 வயதைத் தாண்டிவிட்டீர்கள் எனில் மருத்துவ ஆலோசனைகளை எடுத்துக் கொண்டு ஜாக்கிரதையாக இருப்பது நல்லது.”

**“உலகக்கோப்பை நெருங்கி விட்டது. யார் வெல்வார்கள் என நினைக்கிறீர்கள்?”**

“உலகக்கோப்பை எப்போதுமே பெரிய விஷயம் தான். 1996 இல் இலங்கை, உலகக் கோப்பையை வென்ற மகிழ்ச்சியை வார்த்தைகளில் விளக்க முடியாது. அந்த வெற்றிதான் எங்கள் நாட்டுக்கே தனிப்பெருமையைத் தேடிக்கொடுத்தது. உலகக் கோப்பையை வெல்ல நல்ல அணியோடு கொஞ்சம் அதிர்ஷ்டமும் வேண்டும். 2011 இல் அந்த அதிர்ஷ்டம் இந்தியா பக்கம் இருந்தது. வரும் உலகக்கோப்பையிலும் 100 கோடி மக்களின் பிரார்த்தனையும் விருப்பமும் இந்திய அணிக்குப் பக்கபலமாக இருக்கும் என்பதால் அவர்கள் வெல்லவே வாய்ப்பு அதிகம். இலங்கையும் நல்ல அணிதான். ஆனால் இப்போது கொஞ்சம் தடுமாற்றத்தில் இருக்கிறார்கள். அதனால் கொஞ்சம் சந்தேகமாக இருக்கிறது. 1996 இலும் இப்படித்தான் இருந்தோம். ஆனாலும் உலகக் கோப்பையை வென்றோம். என்ன வேண்டுமானாலும் நடக்கலாம்.”

**“ ‘தமிழனும் இல்லை, சிங்களவனும் இல்லை. நான் ஒரு கிரிக்கெட்டர்” என்ற வசனம் படத்தில் இருக்கிறதே அதுதான் உங்களின் நிலைப்பாடா?”**

“ஆம், அது உண்மைதானே. அதுதான் என்னோட எண்ணம். நான் அப்படித்தான் அறியப்படணும்.”

ஜுனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 202

# இளையராஜாவின் இசைப் பயணம்

வாழ்க்கையில் உயர்வு என்ற விஷயம் யார் மூலம் எப்போது கிடைக்கும் என்றெல்லாம் நாம் கணிக்க முடியாது. இதற்கு இசைஞானி இளையராஜா வாழக்கையையே உதாரணமாகக் கூறலாம். இன்றைக்கு நாம் அண்ணாந்து பார்க்கக்கூடிய இடத்தில் இருக்கும் இளையராஜாவிற்கு ஆரம்பகாலத்தில் சரியான பாதையைக் காட்டியவர் கோரஸ் பாடக்கூடிய கமலா என்ற பெண் தான்.

இளையராஜா, அவரது அண்ணன் ஆர்.டி.பாஸ்கர், அவரது தம்பி கங்கை அமரன் மூவரும் சினிமாவில் இசையமைக்க வேண்டும் என்பதற்காக பண்ணைபுரத்தில் இருந்து சென்னைக்கு வந்தனர். சினிமா வாய்ப்பு கிடைப்பதற்கு முன்பு நாடகங்களுக்கு இசையமைத்துக் கொண்டிருந்தனர். அந்த வகையில், ஓ.ஏ.கே. தேவர் தயாரித்த ஒரு நாடகத்திற்கு மூவரும் இசையமைக்கின்றனர். அந்த நாடகத்திற்காக பாட வந்தவர்தான் கமலா. அவர் பாடகி என்பதால் வந்தவுடனேயே இவர்களது இசைத்திறமை மற்றும் இசைக்கருவிகளை கையாளும் விதத்தைப் பார்த்து அசந்துவிட்டார். உடனே, இளையராஜாவை அழைத்து ஏதும் படங்களுக்கு இசையமைத்துள்ளீர்களா என்று கேட்கிறார். சினிமாக்கு இசையமைக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஊரில் இருந்து கிளம்பி வந்தோம், இன்னும் வாய்ப்பு கிடைக்கவில்லை என்று இளையராஜா கூறுகிறார்.

இந்தக் கமலா எச்.எம்.வி நிறுவனம் உருவாக்கும் தனிப்பாடல்களிலும் பாடுவார். இசை உலகத்தில் அவரது பெயரே எச்.எம்.வி. கமலாதான். கர்நாடக சங்கீதம், மேற்கத்திய இசையெல்லாம் தெரியுமா என்று கமலா இளையராஜாவிடம் கேட்க, அவர் தெரியாது எனக் கூறுகிறார். மேலும், எங்களுக்கு அதைக் கற்றுக்கொள்ள வாய்ப்பு அமையவில்லை. உங்களுக்குத் தெரிந்த ஆட்கள் இருந்தால் சொல்லுங்கள், நாங்கள் கற்றுக்கொள்கிறோம் என்கிறார்.

நிறைய மேடைகளில் தன்ராஜ் மாஸ்டரை தன்னுடைய குரு என்று இளையராஜா கூறுவார். அந்த தன்ராஜ் மாஸ்டரை இளையராஜாவிற்கு பரிந்துரைத்தவர் எச்.எம்.வி. கமலாதான். கமலாவின் பரிந்துரையைத் தொடர்ந்து, தன்ராஜ் மாஸ்டரிடம் சென்று இசை கற்க ஆரம்பித்தார் இளையராஜா. அங்குதான் கர்நாடக இசை, மேற்கத்திய இசையை அவர் கற்றார். சில நாட்களில் கையில் காசில்லை என்றால் வடபழனியில் இருந்து மைலாப்பூருக்கு 8 கிலோமீற்றர் கால்நடையாகவே நடந்து செல்வாராம். அவரிடம் இசை கற்க ஆரம்பித்த கொஞ்ச நாட்களிலேயே மிகப்பெரிய ஜீனியஸிடம் நாம் இசை கற்கிறோம் என்பது இளையராஜாவிற்கு தெரிந்துவிட்டது.

தூக்கத்தில் எழுப்பி கேட்டால்கூட இப்போது இசை நோட்ஸ் கொடுப்பார் இளையராஜா. ஆனால், தன்ராஜ் மாஸ்டரை சந்திக்கும்வரை இளையராஜாவிற்கு இசை நோட்ஸ் எழுதவே தெரியாதாம். ஒருநாள் ஜி.கே. வெங்கடேஷ் என்று ஒரு இசையமைப்பாளர் இசையமைக்கும் படத்திற்கு இசைக்கருவிகள் வாசிக்க தன்ராஜ் மாஸ்டர் செல்கிறார். அப்போது இளையராஜாவையும் உடன் அழைத்துச்செல்கிறார். அன்று பணிகள் முடிந்த பிறகு தன்னுடைய மாணவனை உதவியாளராகச் சேர்த்துக்கொள்ளும்படி பரிந்துரை செய்கிறார்.

அதன் பிறகு, ஜி.கே.வெங்கடேஸுடன் உதவியாளராக பொன்னுக்கு தங்க மனசு படத்தில் இளையராஜா வேலை செய்கிறார். அதன் பிறகு, அந்தப் படத்தை இயக்கிய தேவராஜ் மோகனின் அடுத்த படமான அன்னக்கிளி மூலமாக இளையராஜா இசையமைப்பாளராக அறிமுகமானார். பஞ்சு அருணாச்சலம்தான் அந்த வாய்ப்பை அவருக்கு வழங்கினார். கமலா மூலமாக தன்ராஜ் மாஸ்டரின் அறிமுகம், அவர் மூலமாக ஜி.கே.வெங்கடேஷின் அறிமுகம், அவர் மூலமாக தேவராஜ் மோகன் அறிமுகம், அவர் மூலமாக பஞ்சு அருணாச்சலம் அறிமுகம், அவர் மூலமாக பட வாய்ப்பு, அதன் மூலம்தான் மாபெரும் இசையமைப்பாளராக இளையராஜா அறிமுகமானார்.

இன்று இசை தேவதை போற்றும் ஞானி.

# கனடாவில் சீக்கிய
# கொல்லப்பட்டதன் பின்

- ஆதாரங்கள் உள்ளதாக கனடா தெரிவிப்பு
- இந்திய தூதரக அதிகாரியை வெளியேற்றி
- கனடா தூதரக அதிகாரிக்கு சம்மன் கொடு

(ஓட்டாவா)

**கனடாவில் சீக்கிய மதத்தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் லப்பட்டதன் பின்னணியில் இந்திய அரசாங்கம் உள்ளது நம்பத்தகுந்த ஆதாரங்கள் உள்ளதாக கனடா பிரதமர் ஜ குற்றம் சாட்டியுள்ளார். இதேவேளை இந்த குற்ற அடிப்படையாக வைத்து இந்திய தூதரக அதிகா வெளியேற்றியது. அதற்கு பதிலடியாக கனடா தூதரக சம்மன் அனுப்பியது இந்தியா.**

ஜூன் மாதம் 18 ஆம் திகதி நிஜார் பிரிட்டிஸ் கொலம்பியாவில் சீக்கிய ஆலயத்திற்கு வெளியே சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்த கொலைக்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்புள்ளதை புலனாய்வு அமைப்புகள் கண்டுபிடித்துள்ளன எனவும் சமீபத்தில் ஜி-20 உச்சிமாநாட்டின் போது இந்த விடயம் குறித்து இந்திய பிரதமருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதாக கனடா பிரதமர் தெரிவித்துள்ளார்.

கனடாவில் கனடா பிரஜையின் கொலையில் வெளிநாட்டு அரசாங்கத்திற்கு தொடர்புள்ளதை ஏற்றுக்கொள்ளமுடியாது. இது



# விஜய் ஆண்டனியி
# விபரீத முடிவெடுத்து

(டில்லி)

பிரபல நடிகரும் இசையமைப்பாளருமான விஜய் ஆண்டனியின் மகள் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. விஜய் ஆண்டனி சென்னை ஆழ்வார்பேட்டை டிடிகே சாலையில் வசித்து வருகிறார். இவரது மகள் மீரா, சென்னையில் உள்ள பாடசாலையில் 12 ஆம் வகுப்பு படித்து வருகிறார்.

இவர் நேற்றுமுன்தினம் இரவு வழக்கம் போல் தன்னுடைய அறையில் உறங்க சென்ற நிலையில் நேற்று அதிகாலை 3 மணியளவில் அறைக்கு சென்ற போது தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார்.

உடன மருத்துவ பரிசோதி யிலேயே ளனர். கட தத்தில் லைக்கு கூறப்படு செய்துள் விசாரணை றனர்.

# கேரளாவில் நிபா வைரஸ் பாதிப்பால் ஆன்லைன் மூலம் சிகிச்சை வசதி

(டில்லி)

நிபா வைரஸ் நோய்த் தாக்குதலுக்கு உள்ளானவர்களுக்காக ஆன்லைன் மூலம் சிகிச்சை அளிக்கும் வசதியை கேரள அரசு ஏற்படுத்தியுள்ளது.

கேரள மாநிலம் கோழிக்கோடு மாவட்டத்தில் நிபா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டு. இதுவரை, 6 பேர் தொற்றுக்குள்ளாகியதில் அதில் இருவர் உயிரிழந்துள்ளனர். வைரஸ் பரவலை தடுக்கவும், பாதிக்கப்படுவோருக்கு உரிய சிகிச்சை அளிக்கவும் மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்நிலையில் "இ - சஞ்சீவினி" எனப்படும் தொலை பேசி வாயிலாக சிகிச்சை பெறும் திட்டத்தின் கீழ், நிபாவுக்கான ஆன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யே மதத்தலைவர்
# ன்னணியில் இந்தியா

## விப்பு
## ற்றிய கனடா
## காடுத்த இந்தியா

**நிஜார் சுட்டுக்கொல்**
**ள்ளது என்பதற்கான**
**மர் ஜஸ்டின் ட்ருடோ**
**குற்றச்சாட்டுகளை**
**திகாரியை கனடா**
**ாதரக அதிகாரிக்கு**



எங்கள் இறைமையை மீறும் செயல் எனவும் அவர் பொதுச்சபையில் தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களாக கனடா பிரஜையான ஹர்தீப் சிங் நிஜார் சுட்டுக்கொல்லப்பட்டமைக்கும் இந்திய முகவர்களுக்கும் தொடர்புள்ளதாக கிடைத்த நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகளை கனடாவின் பாதுகாப்பு தரப்பினர் ஆராய்ந்து வருகின்றனர்-எங்கள் அரசாங்கம் குற்றவாளிகளை பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகயையும் எடுக்கும் எனவும் கனடா பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு உள்ளது என கனடா குற்றம் சாட்டியதைத் தொடர்ந்து இந்திய தூதரகத்தின் உயர் அதிகாரியை வெளியேற கனடா அரசு உத்தரவிட்டது.

கனடாவின் இந்த உத்தரவையடுத்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் இந்தியாவுக்கான கனடாவின் தூதருக்கு சம்மன் அனுப்பியது.

இதனைத் தொடர்ந்து அவரிடம் கனடாவில் ராஜதந்திர அளவிலான மூத்த தூதரக அதிகாரி இன்னும் ஐந்து நாட்களில் இந்தியாவில் இருந்து வெளியேற வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளது.

காலிஸ்தான் நிஜர் மரணத்தில் இந்தியாவின் பங்கு உள்ளதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டிய சில மணி நேரங்களிலேயே இந்தியாவின் தூதரக அதிகாரி கனடாவில் இருந்து வெளியேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. (5)

# உக்ரைனுக்கு 200 கோடி நிதியுதவி வழங்கும் கனடா

(ஒட்டாவா)

உலகின் மிகப்பெரிய இராணுவ கூட்டணியான நேட்டோவில் சேர முயன்றதற்காக உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்த நிலையில் இன்னும் போர் முடிவுக்கு வரவில்லை.

ரஷ்யா தொடர்ந்து நடத்திய ஏவுகணை தாக்குதலால் உக்ரைன் நிலை குலைந்தது. இதனையடுத்த உக்ரைனுக்கு வான் பாதுகாப்பு மற்றும் தேசிய உட்கட்டமைப்பை வழங்குவதற்காக இங்கிலாந்து தலைமையிலான ஒரு கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்த கூட்டணியில் உள்ள கனடா, டென்மார்க், நெதர்லாந்து, அமெரிக்கா போன்ற நாடுகள் ஆயுதம், பொருளாதார உதவிகளை இதன் மூலம் வழங்கி வருகின்றன.

இந்நிலையில் கடந்த ஜூன் மாதம் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உக்ரைனுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கியை சந்தித்து பேசினார்.

இதன்போது உக்ரைனுக்கு ரூ.4 ஆயிரம் கோடி மதிப்பிலான இராணுவ உதவிகளை வழங்குவதாக கனேடிய பிரதமர் அறிவித்தார்.

அதன் ஒரு பகுதியாக தற்போது சுமார் ரூ.200 கோடியை உக்ரைனுக்கு நிதியுதவி வழங்கும் இந்த கூட்டமைப்புக்கு கனடா அரசாங்கம் வழங்கி உள்ளது. (நி-5)

# பேருந்து-பாரவூர்தி மோதல் 20 பேர் உயிரிழப்பு

## நால்வர் காயம்

(பிரிட்டோரியா)

தென்னாபிரிக்காவில் பேருந்து ஒன்றும் பாரவூர்தியொன்றும் நேருக்கு நேர் மோதுண்டமையினால் 20 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்று நேர்ந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

வைரச் சுரங்க அகழ்வு பணிகளுக்காக தொழிலாளர்களை ஏற்றிச்சென்ற பேருந்து ஒன்றும் பாரவூர்தியொன்றுமே இவ்வாறு மோதுண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரவூர்தியின் சாரதியின் கவனக்குறைவாக வாகனத்தை செலுத்தியமையால் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவத்தில் மேலும் நால்வர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (நி-5)

# யியின் மகள்
# த்து மரணம்

உடனடியாக பதறிப்போய் மகளை மீட்டு மருத்துவமனைக்கு அழைத்து சென்ற போது, பரிசோதித்த மருத்துவர்கள் வரும் வழியிலேயே உயிர் பிரிந்ததாக தெரிவித்துள்ளனர். கடந்த சில நாட்களாக மீரா மன அழுத்தத்தில் இருந்ததாகவும் இதுவே தற்கொலைக்கு காரணமாக இருக்கலாம் எனவும் கூறப்படுகிறது. எனினும் வழக்குபதிவு செய்துள்ள தேனாம்பேட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-5)

லைன் புறநோயாளிகள் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. காலை 8 மணியில் இருந்து மாலை 5 மணி வரை ஆன்லைன் வாயிலாக சிகிச்சை பெற முடியும். இதன் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனைக்கு செல்லாமலேயே நிபா வைரஸ் தொடர்பாக வைத்தியர்களின் ஆலோசனையை பெற முடியும். மேலும் நிபா வைரஸ் தொடர்பான சந்தேகங்களுக்கும் விளக்கம் பெறமுடியும். (நி-5)

# அமெரிக்கா-ஈரான் கைதிகள் உடன்பாட்டின்படி பரிமாற்றம்

(வோஷிங்டன்)


ஈரானிலிருந்து விடுவிக்கப்பட்ட 5 கைதிகள் கட்டார் சென்று சேர்ந்துள்ளனர். அமெரிக்காவைச் சேர்ந்த அவர்களில் ஒருவர் 8 ஆண்டுகளாக ஈரானில் சிறையில் இருந்தவர்.

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான கைதிகள் பரிமாற்ற உடன்பாட்டின் அடிப்படையில் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். வோஷிங்டனும் ஈரானியக் கைதிகள் ஐவரை விடுதலை செய்துள்ளது.

உடன்பாட்டின்படி, ஈரானின் நிபந்தனைக்கு ஏற்ப 6 பில்லியன் டொலர் நிதியையும் அமெரிக்கா விடுவித்துள்ளது.


ஈரானுக்குப் பிணைத் தொகையாக அதைக் கொடுக்கவில்லை என்றும் அந்தப் பணம் ஈரானின் மனிதாபிமானச் செயல்களுக்கு உதவும் என்றும் பைடன் நிர்வாகம் கூறியது. அவ்வாறு செய்யப்படவில்லை என்றால் பணம் மீண்டும் முடக்கப்படும் என்றும் அமெரிக்கா சொன்னது.

ஆனால் பணம் ஈரானின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் அது ஈரானிய மக்களுக்குச் சொந்தமானது என்றும் அந்நாட்டு ஜனாதிபதி இப்ராஹிம் ரயிசி குறிப்பிட்டார். (நி-5)



# அமெரிக்காவின் அதிநவீன போர் விமானம் மாயம்

## தகவல் தெரியாது திணறும் அமெரிக்கா



(வோஷிங்டன்)

அமெரிக்கா தனது எப்.35 பி என்ற அதி நவீன தாக்குதல் போர் விமானத்தை காணவில்லை என்று அறிவித்துள்ளது.

உலகின் மிகப்பெரிய விமானப் படைகொண்டுள்ள அமெரிக்காவின் 80 மில்லியன் டொலர் மதிப்புடைய இந்த விமானம் எங்கே போனது என்று அறிந்து கொள்ள முடியாமல் இராணுவம் திணறி வருவதாக தெரிவித்துள்ளது.

தென் கரோலினா கடலோரத்தில் இந்த விமானம் சென்ற போது தொடர்பு அறுந்து மாயமாகி விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. விமானம் ஆட்டோ மோடில் இருந்ததாகவும் விமானி பாராசூட் மூலம் குதித்து விட்டதாகவும் கூறப்படுகிறது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறும் உலக வழக்கமும் உணவுப் பழக்கமும் உண்ணும் பழக்கமும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

காலநிலை மாற்றமடைய தொடங்கியதிலிருந்து கொவிட்-19 இனது தாக்கம் அதிகரித்ததிலிருந்து இன்னும் இயற்கை அனர்த்தங்கள் அதிகரித்ததிலிருந்து உலகெங்கும் போர்மேகங்கள் சூழ்ந்ததிலிருந்து உலக வழக்கம் முற்றிலும் மாறுபட்டிருப்பதனை காணலாம். மக்களின் இறப்பு என்பது சாதாரணமானதாக உருவெடுத்துள்ளது. என்ன வசதியிருந்தும் விஞ்ஞானம் உலகை மிஞ்சி வளர்ந்து விட்டபின்பும் உணவு போதாமை உலக மக்களை வாட்டியெடுக்கத் தொடங்கி விட்டது.

இதற்கு அடிப்படைக் காரணம் உணவுற்பத்தி ஒரு பக்கம். அவற்றினது, கிடைக்கும் தன்மை மற்றும் பகிர்ந்தளிக்கப்படும் தன்மை இன்னொரு பக்கம். இவை இரண்டுக்குமிடையில் சந்தைப்படுத்தலும் விலைத் தளம்பலும் மூன்றாவது பக்கம். என்றும் எப்போதும் எம்மாலேயேஎமக்கு அழிவு என்பது சரியாகத்தான் இருக்கின்றது.

மக்கள் உணவுக்காக கையேந்தும் நிலைமை எதிர்பாராத விதமாக பல நாடுகளில் அதிகரித்துள்ளது. உணவுப் போதாமை சூடானில் தொடங்கி பல நாடுகளில் பூதாகாரமாக உருவெடுத்துள்ளது. உணவுற்பத்தியிலும் கணிசமானளவு வீழ்ச்சி கண்டிருக்கின்ற வருடமாக பதியப்பட்டிருக்கின்றது.

கிடைக்கின்ற உணவை தெரிவு செய்வதில் தான் பிரச்சினையென்றால் உண்ணுகின்ற பழக்கத்தைக் கூட மாற்ற எமக்கு இயலாதிருக்கின்றது.

பாரம்பரியமாக வாழ்ந்த மக்கள் இயற்கையாக கிடைத்த உணவை தமக்கேற்ப தயார் செய்து உண்டு நீடுகாலம் வாழ்ந்தனர் என்பதனை அறியும் போது அந்த யுகம் இனித் திரும்ப வாராதா என்ற ஏக்கமும் இருக்கவே செய்கின்றது.

ஒருபக்கம் குடிக்க நீரின்றி நிலம் வறண்டு மனிதன் மட்டுமல்ல விலங்குகளும் தவிக்கும் காட்சிகளும் மறுபுறம் துருவப் பகுதிகளில் குறிப்பாக அன்ராட்டிக்கா மற்றும் பச்சை நில (Green land) பனிக்கட்டிகள் கரைந்து கடல் நீரின் மட்டம் அதிகரிக்கின்ற செய்திகளும் இதனால் மிகவும் தாழ்வான கடற்கரைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு அதிகூடிய எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளது.

கிழக்கு லிபியாவில் டானியல் சூறாவளியின் பின் விளைவாக டரானா நகரில் எப்போதும் வறண்டிருக்கும் நிலம் கொட்டுமழையின் தொடர்ச்சியாக திடீரென்று உருவான வெள்ளப்பெருக்கினாலும் இரு அணைகள் உடைப்பெடுத்தமையும் உறக்கத்திலிருந்த மக்களை அள்ளியெடுத்து கடலுக்குள் இழுத்துச் சென்றுவிட்டது.


ஏறக்குறைய 20,000 மக்களை உறவுகள் கடலுக்குள் தேடிக் கொண்டிருக்கின்றனர். இதனை மேலும் தீவிரமாக்கி நாளாந்தம் நிகழும் இயற்கை அனர்த்தங்கள் பல நாடுகளில் உணவு, நீர், உறையுள் என அனைத்திலும் பிரச்சினைகளை மேலும் விரிவாக்கி விட்டுள்ளன. அதிகரித்த வளிமண்டல வெப்பநிலையின் தொடர்ச்சியாக காட்டுத்தீ பரவலாக கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இலங்கை என பல நாடுகளில் ஏற்பட்டதனைத் தொடர்ந்து பல அழிவுகளும் இடம்பெறுகின்றன.

இயற்கையான வனப் பகுதிகளில் உருவான தீ பரவலடைந்து காற்றின் வேகத்தில் சுழன்றெழுந்து விரைந்து பல இடங்களை எரித்தழித்து விட்டது.

விஞ்ஞானம் ஒரு பக்கம் வளர்ந்து செல்ல இயற்கை அனர்த்தங்களின் விபரீதங்களும் அதிகரித்தே செல்கின்றன. இயற்கையை தீர்மானிப்பதற்கும் அதன் அழிவுகளை, அனர்த்தங்களை கட்டுப்படுத்தவும் விஞ்ஞானம் இன்னமும் திணறிக் கொண்டிருக்கின்றது என்பது தான் உண்மை.

2024 ஆம் ஆண்டு 1.5 பாகைசெல்சியஸ் இனால் வளிமண்டல வெப்பநிலை அதிகரிக்கும் என கணிப்பிட்டிருக்கின்றார்கள். இந்த உயர்வு துருவப் பகுதிகளில் பனிப் பாறைகள் உருகி கடல் மட்டம் மேலும் அதிகரிக்கும் நிலைமை தோன்றியிருக்கின்றது.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



கடல் மட்டம் அதிகரிக்கும் போது பல நாடுகளின் கரையோரப் பகுதிகள் நீரினுள் மூழ்கிவிடும் அபாயத்தையும் காணீர். இதில் பங்களாதேஷ், சீனா, இந்தியா மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளின் கரையோரங்கள் இந்த அனர்த்தத்துக்குள் அகப்பட்டுவிடும் எனவும் ஏறக்குறைய 900 மில்லியன் மக்கள் இதனால் பாதிப்படைய நேரிடும் எனவும் கணிப்பிடப்பட்டிருக்கின்றது.

மாலைதீவு ஏற்கெனவே இந்த இடருக்குள் வரவிருக்கின்றது என எதிர்வுகூறப்பட்டிருக்கின்றது. எமது நாட்டிற்கு தற்போதைக்கு இப்பிரச்சினை இல்லையென்றாலும் யாழ்ப்பாணம் கடல் பரப்பிலிருந்து பத்து மீற்றர் உயரத்தில் இருப்பதால் எதுவும் நடக்கலாம் என எண்ணுவோம்.

இறுதியாக மொரோக்கோவில் ஏற்பட்டுள்ள நிலநடுக்கம் மக்களை பல சொத்துக்களை இழந்து வீதியில் எதுவுமின்றி தவிக்க விட்டிருக்கின்றது.

அனர்த்தங்கள் அனைத்தும் கண்மூடி திறப்பதற்குள் நடந்தேறியவையாக அழிவின் கோரமுகத்தை காட்டி நிற்கின்றன. இயற்கையனர்த்தங்களின் இறுதி வடிவம் உணவு மற்றும் குடிநீர்ப் பற்றாக் குறையாகவே உள்ளது. இவற்றைத் தவிர்த்து எந்த முன்னேற்றத்தையும் மனிதன் கண்டுவிட முடியாது.

நெருக்கடி நிலைக்குள் சிக்கியிருக்கும் நாடுகளை மீட்கும் போராட்டத்தில் ஐ.நாவின் அமைப்புக்கள் மற்றும் பல தொண்டு அமைப்புக்கள் இடைவிடாது உதவிக்கரத்தை நீட்டியிருக்கும் இவ்வேளையில் இன்னமும் ஒருவேளை உணவின்றி தவிக்கும் மக்களுக்கான முழுமையான உதவிகள் உலகமெங்கும் சென்றடையவில்லை.

பல்வேறுபட்ட இடர்களுக்குள் சிக்கித்தவிக்கும் மக்களை மீட்டெடுப்பது என்பது மிகவும் இலகுவான காரியமல்ல.

எமது பிரதேசத்தில் உணவில்லை என்பதனை விட நாம் கொண்ட உணவுப் பழக்கத்தினாலும் உண்ணும் பழக்கத்தினாலும் எம்மில் பலர் பட்டினியின் விளிம்பில் நிற்கின்றனர். தேவை கருதியாவது பழக்க வழக்கத்தை மாற்றினால் இத்தகைய இடர்களிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். குறிப்பிட்ட உணவுகளை நாம் உண்பதனையே எமது தின வழக்கமாக கொண்டிருக்கின்றோம். ஆனால் அவ்வகை உணவுகளை தயாரிக்க அதிக செலவாகும் என்பதனை நாம் கவனத்திற் கொள்வதில்லை. உணவுற்பத்தி செலவு அதிகரிக்கின்ற காரணத்தினால் உணவுப் பொருட்களின் செலவும் அதிகரித்து விட்டிருக்கின்றது. எமது நாட்டின் பொருளாதார மீட்சி என்பது கற்பனைக் கெட்டாத தூரத்திலிருக்கும் போது அதனை கருத்திற் கொண்டு எமது வாழ்க்கை முறைகளை வரவு- செலவுக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்ளாத வரை எவருக்குமே மீட்சியில்லை.

பீட்சா, பர்கர், கொத்து என்பன அளவு கடந்த கொழுப்பை எமது உடலில் சேர்த்து விடும். உண்ண உண்ண சுவையானதாக இருப்பதால் அதற்குநாம் அடிமையாகி விடுகின்றோம். ஆனால் எமக்கான உணவுகள் பல எமது இயற்கை தந்திருக்கின்றது.

இலைக்கறி வகைகள், கிழங்குகள், காய்கறிகள், தண்டுகள், காய்கள், கனிகள், கொடிகள், படரிகள் இன்னும்இவற்றை வைத்து மதிப்பேற்றஞ் செய்த உணவுப் பொருட்கள் என பலவற்றை கொண்டிருக்கின்றோம்.

இருக்கும் சனத் தொகைக்கு தேவையான உணவை உற்பத்தி செய்வதற்கான விவசாயப் பெருமக்களும் போதியளவு நிலமும் உண்டு. எமது உற்பத்தி, களஞ்சியப்படுத்தி, மதிப்பேற்றி இன்னும் சந்தைத் தொழில்நுட்பத்தை விருத்தி செய்யாது முட்டையையும் இறைச்சியையும் இன்னும் உணவையும் இறக்குமதி செய்து இன்னும் எமது மக்களை வறியவர்களாக்கிசோம்பேறியாக்குவதைத் தவிர இவற்றினால் வேறு என்ன செய்து விடமுடியும்.

எமது பாரம்பரிய உணவுகளிலேயே எமது சுகாதாரம் தங்கியிருக்கின்றது என்பதனை இன்னுமா நாம்புரிந்து கொள்ளவில்லை?

உணவுப்பழக்கம் தான் அப்படியென்றால் உண்ணும் பழக்கமும் மாறாதிருக்கின்றது. அளவான உணவு, சமநிலையான உணவு, பல்வகையான (Diversified food) உணவு இன்னும் இயற்கையாக கிடைக்கின்ற உணவுப் பொருட்களை முழந்தளவு நீராவியில் அவித்து எண்ணெய் வகைகளை தவிர்த்து உண்ணும் போது எந்த நோயும் தன்னுள்ளே அடங்கி விடுகின்ற தன்மையை அனுபவத்தில் உணர்ந்தவர்களை கேளுங்கள். உணவு சமிபாடடையும் காலத்தை கணித்து அதன்பின்னர் உணவினை உண்டு வர சமிபாட்டு பிரச்சினைகள் தானாக தீர்வினைக் காணும்.

அளவுக்கு மேலே திணிக்க திணிக்க வயிறு உப்பி விடுவதுடன் அனைத்து நோய்களும் அணுகத் தொடங்கி விடும். சாதாரணமாக நீரிழிவு, இதயநோய், கண்பார்வை குறைபாடு, குனிந்து நிமிர முடியாமை,சோம்பல் என்பன எமது உணவுப் பழக்கத்தினாலும் உண்ணும் பழக்கத்தினாலும் ஏற்படுகின்றதனை உணர்ந்து நம்மை நாமே கட்டுப்படுத்தத் தொடங்கினால் அனைத்தும் எமது கட்டுப்பாட்டுக்குள் வந்து விடும்.

முக்கியமாக எமது மனமும் ஒருநிலைப்படும். இவையனைத்திற்கும் மனமே முக்கிய காரணம். எந்த வழக்கத்தையும் பழக்கத்தையும் மாற்றும் திறன் மனதிற்குஉண்டு. இதனை எமது நல்வாழ்வுக்காக ஒருதரம் மாற்றித்தான் பார்ப்போமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த ஒன்றுதிரண்டுள்ள சிலாவத்தை இளைஞர்கள்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிலாவத்தை பகுதியில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த கிராம அமைப்புக்கள் இளைஞர்கள் ஒன்றுதிரண்டு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.


தமது கிராமத்தில் போதைப் பொருள் பாவனையினால் ஏற்படும் விளைவுகள், பாதிப்புக்கள் தொடர்பில் சம்மந்தப்பட்ட தரப்புக்களின் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை என்பதை உணர்ந்த கிராம மக்கள் மற்றும் இளைஞர்கள் கிராம அலுவலர் தலைமையில் முல்லைத்தீவு தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை அழைத்து தமது கிராமத்தில் சிவில் பாதுகாப்பு குழு ஒன்றை அமைத்து போதைப்பொருள் பாவனையை தடுக்க நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

தீர்த்தக்கரை பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவரையும் அதிகளவான கசிப்பினையும் மீட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று கிராமத்தில் இடம்பெற்ற கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களையும் குறித்த சிவில் பாதுகாப்பு குழு கண்டுபிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதுடன் போதைப்பொருள் விற்பனையாளர்களை கைது செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிராம மக்கள் மற்றும் இளைஞர்கள் இணைந்து முன்னெடுத்துச் செல்லும் இந்த நடவடிக்கைக்கு பலரும் பாராட்டுக்கள் தெரிவித்து வருகின்றனர். (நி-6-299)

# வலுவிழக்கும் ஐ.நா மீதான நம்பிக்கை - செல்வம் எம்.பி



(மன்னார்)

ஐ.நா சபையிலே தீர்மானங்கள் வருகின்ற போதேல்லாம் இலங்கை அரசாங்கம் கால நீடிப்பை பெறுவதற்கான உத்திகளை கையாண்டு வருகின்றது. அதற்கு ஏற்ற வகையில் ஐ.நா சபையும் அவர்களுக்கு வாய்ப்பை வழங்கும் விதமாகவே நடந்து கொள்கின்றார்கள். இதனால் தமிழ் மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் மீதான நம்பிக்கை குறைந்து வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் ரெலோ கட்சியின் அலுவலகத்தில் இடம் பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் இம் முறையும் ஐக்கிய நாடுகள் சபையில் முன்வைக்கப்பட்ட அறிக்கை வலுவான காட்டமான அறிக்கையாக காணப்பட்டாலும் அதையும் இலங்கை அரசாங்கம் ஏமாற்றுகின்ற நிலை தொடர்ச்சியாகக் காணப்படுகின்றது. இந்த ஐ.நா சபையானது கடந்த காலத்திலும் கால நீடிப்பை பெற்று தங்களால் எதுவும் செய்ய முடியாது என்பதை சர்வதேசத்திற்கு நிரூபித்திருக்கின்றது.

ஐ.நா சபை அறிக்கைகளை வெளியிடுவதை நிறுத்தி விட்டு அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

மேலும் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் மற்றும் காணி ஆக்கிரமிப்பு,மனித உரிமை மீறல் விடயங்கள் தொடர்பான சாட்சியங்களை வலுவற்றதாக மாற்றுகின்ற விதத்தில் ஐ.நா வை ஏமாற்றி வருகின்றது.

எனவே இந்த நிலை மாற வேண்டும் என்றால் ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச நீதி மன்றத்தில் இலங்கையில் மனித உரிமை மீறல்களை மேற்கொண்டவர்களை நிறுத்த வேண்டும் என்பதுடன் தமிழ் மக்களின் நியாயமான தீர்வுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார். (நி-6-285)

# பூநகரியில் உள்ள உணவகங்களில் பொதுச் சுகாதார குழு திடீர் சோதனை



(யாழ்ப்பாணம்)

பூநகரியிலுள்ள கடற்கரைச் சுற்றுலா உணவகம் மற்றும் வாடியடிப்பகுதி உணவகங்கள் ஆகியன பூநகரி மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தலைமையிலான பொதுச்சுகாதார பரிசோககர் குழுவினால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை திடீர் சோதனைகளுக்கு உட்படுத்தப் பட்டன.

இதன்போது உணவகங்களின் சுகாதார மேம்பாட்டுக்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டதோடு சுகாதாரப் பாதுகாப்பு இன்றி தயார் செய்து விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த சிற்றுண்டிகள் கைப்பற்றி அழிக்கப்பட்டு விரைந்து சீர்திருத்துவதற்கான கால வரையறைகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் உணவு கையாளும் ஊழியர்களின் தற்சுகாதாரம் மற்றும் உணவகங்களின் இறுதிக் கழிவகற்றல் போன்றவற்றை சரியாகக் கடைப்பிடிக்காதவர்கள் எச்சரிக்கப்பட்டதோடு தொடர் கண்காணிப்புகளிலும் சுகாதார நடைமுறைகளை மீறி பொதுமக்களுக்கான உணவுச் சுகாதாரத்தை கேள்விக்குறியாக்குபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-6-30)

# புரட்டாசி மாத இராசி பலன்கள் 18.09.2023-17.10.2023

## மிதுனம்

**பிறருடைய பிரச்சினைகள் தீர வழி சொல்லும் மிதுன ராசி வாசகர்களே!**

புரட்டாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது. மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அதே நேரத்தில் சனி வக்கிர இயக்கத்தில் அஷ்டமத்துச் சனியாகவும் வருகிறார்.. எனவே ஒருசில காரியங்கள் விரைவில் முடியும் என்றாலும் ஒரு சில காரியங்களில் தடைகளும், தாமதங்களும் வரத்தான் செய்யும். "நினைத்தது நிறைவேறவில்லையே" என்ற கவலை அகல, வழிபாடுகளை அவ்வப்போது மேற்கொள்வது நல்லது.

புதன் வக்கிரம்

புரட்டாசி 10 ஆம். திகதி, கன்னி இராசியில் புதன் வக்கிரம் பெறுகிறார். அதே நேரத்தில் அந்த வீடு புதனுக்கு உச்ச வீடாகும். உங்கள் இராசியைப் பொறுத்த வரை இராசிநாதன் புதன் உச்சம் பெறுவது யோகம்தான். ஆரோக்கியம் சீராகும். ஆதாயம் தரும் தகவல்கள் அதிகம் கிடைக்கும். எதிர்பாராத விதத்தில் இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். வாடகை கட்டடத்தில் நடைபெறும் தொழிலாக இருந்தால் அதைச் சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றும் யோகம் உண்டு. மாமன், மைத்துனர் வழியில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். பூமி யோகம் முதல், புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வரும் சூழ்நிலைகள் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும்.

துலாம் - செவ்வாய்

புரட்டாசி 17 ஆம் திகதி துலாம் ராசிக்கு செவ்வாய் வருகிறார். 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு வரும் போது, பொருளாதாரம் திருப்தி கரமாக இருக்கும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும் தாய்வழிஆதரவு உண்டு. புதிய வாக னங்கள் வாங்க வேண்டு மென்ற எண்ணம் நிறைவேறும். நம்பிக்கை கள் அனைத்தும் நடைபெற வேண்டுமா னால் நாம் வழிபாட்டில் கவனம் செலுத்த வேண்டும். அந்த அடிப்படையில் செவ்வா யால் நற்பலன்கள் பெற முருகப்பெருமானை வழிபடுவது நல்லது. பத்திரப் பதிவிலோ, மனை கட்டுவதிலோ தடையாக இருந்தவர்களுக்கு இப்பொழுது காரியங்கள் துரிதமாக நடைபெறும்.

துலாம் - புதன்

புரட்டாசி 28 ஆம் திகதி, துலாம் இராசிக்குப் புதன் வருகிறார். உங்கள் இராசிநாதன் புதன் பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு வரும்போது யோகமான நேரம் தான். நினைத்தது நிறைவேறும். நிகழ்காலத் தேவை பூர்த்தியாகும். அனைத்து முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். பணப் புழக்கத்திற்கு குறைவு ஏற்படாது. பாதியில் நின்ற பணிகள் ஒவ்வொன்றாக முடிவடையும். பிள்ளைகளின் கல்யாண முயற்சிகளும், கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சிகளும் நிறைவேறும்.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்குப் புதிய பாதை புலப்படும். வியாபாரம், தொழில் செய்பவர்கள் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து முடிவெடுக்க வேண்டிய நேரம் இது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சகப் பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும். கலைஞர்களுக்கு முன்னேற்றப் பாதை புலப்படும்.

மாணவ- மாணவிகளுக்கு பாடுபட்டதற்கேற்ற பலன் உண்டு. பெண்களுக்கு கணவன் - மனைவிக்கி டையே நெருக்கம் அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமைக்கு குந்தகம் விளைவித்தவர்கள் விலகுவர். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

## கடகம்

**எதிலும் புதுமை படைக்க வேண்டு மென்று நினைக்கும் கடக இராசி வாசர்களே!**

புரட்டாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் சப்தம ஸ்தானத்தில் சனி சஞ்சரித்து கண்டகச் சனியாக உலா வருகிறார். ராசிநாதன் சந்திரனோடு கேது சஞ்சரித்து குருவால் பார்க்கப்படுகிறார். எனவே அலைச்சலுக்கேற்ற ஆதாயம் உண்டு. அதிகார வர்க்கத்தினரின் பகையை வளர்த்துக் கொள்ள வேண்டாம். புதிய முயற்சிகளில் ஈடுபடும் பொழுது அனுபவஸ்தர்களையோ, ஆன்மிகப் பெரியோர்களையோ, ஆலோசனை கேட்டுச் செய்வது நல்லது.

புதன் வக்கிரம்

புரட்டாசி 10 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். கன்னி இராசி புதனுக்கு உச்ச வீடாகவும் இருக்கிறது. சகாய ஸ்தானாதிபதி புதன் சகாய ஸ்தானத்தில் உச்சம் பெறுவது யோகம்தான். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில் தொடர்பாக எடுத்த முயற்சிகளில் நன்மை கிடைக்கும். எதையும் அறிவுபூர்வமாக சிந்தித்துச் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும். வாய்தாக்கள் ஓயும். வருமானம் திருப்தி தரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வெளிநாட்டில் நல்ல நிறுவனாங்களில் இருந்து கூட அழைப்புகள் வரலாம்.

துலாம் - செவ்வாய்

புரட்டாசி 17 ஆம் திகதி துலாம் இராசிக்கு செவ்வாய் வருகிறார். உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகமான செவ்வாய், சுக ஸ்தானத்திற்கு வருவதால் சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். உடன்பிறப்புகள் உறுதுணையாக இருந்து உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுப்பர். கடன்சுமை தீரப் புதிய வழிபிறக்கும். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். வீடு கட்டுவது அல்லது கட்டிய வீட்டை விலைக்கு வாங்குவது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள்.

துலாம் - புதன்

புரட்டாசி 28 ஆம் திகதி துலாம் இராசிக்குப் புதன் வருகிறார். உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் சுகஸ்தானத்திற்கு வருவது யோகம்தான். விரயாதிபதி 4 இல் சஞ்சரிக்கும் பொழுது சுப விரயங்கள் அதிகரிக்கும். கல்யாண முயற்சிக்கும், கல்வி வளர்ச்சிக்கும் செலவிடுவீர்கள். கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் சூழல் உருவாகும். பயணங்கள் பலன் தருவதாக அமையும். பாசம் மிக்கவர்களின் நேசத்தால் உங்கள் எண்ணங்கள் பூர்த்தியாகும். தாயின் உடல்நலம் சீராகும்.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு பொன்னான நேரம் இது. வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு பணிநீடிப்பும், மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும். கலைஞர்களுக்குத் தங்கள் திறமையை வெளிப்படுத்த சந்தர்ப்பங்கள் கைகூடி வரும்.

மாணவ- மாணவிகளுக்கு வெற்றி பெறமுழு முயற்சி தேவை. பெண்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவதோடு பணிபுரியும் பெண்களுக்கு சகப் பணியாளர்களால் பிரச்சினைகள் ஏற்படலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 287





அவனுடன் பேசிக்கொண்டே பூங்குழலி துடுப்பை வலித்துக்கொண்டிருந்தாள். படகு போய்க்கொண்டிருந்தது.

"இலங்கைத் தீவுக்கு நாம் எப்போது போய்ச் சேரலாம்?" என்று கேட்டான் வந்தியத்தேவன்.

"இரண்டு பேராகத் துடுப்பு வலித்தால் பொழுது விடியும் சமயம் போய்ச் சேரலாம், காற்று நமக்கு உதவியாக இருந்தால்!"

"நானும் துடுப்பு வலிக்கிறேன் உன்னைத் தனியாக விட்டுவிடுவேனா?"

வந்தியத்தேவன் தன் அருகிலிருந்த துடுப்பைப் பிடித்து வலித்தான். ஆ! படகு வலிப்பது இலேசான வேலையன்று. மிகவும் கடினமான வேலை. படகு 'விர்' என்று சுழன்று அடியோடு நின்றுவிட்டது.

"இது என்ன? நீ துடுப்பை வலித்தால் படகு போகிறது நான் தொட்டவுடனே நின்றுவிட்டதே!"

"நான் சமுத்திரகுமாரியல்லவா? அதனாலேதான்! நீ சும்மா இருந்தால் போதும்! உன்னை எப்படியாவது இலங்கையில் கொண்டு போய்ச் சேர்த்துவிடுகிறேன் சரிதானே?"

வந்தியத்தேவன் சிறிது வெட்கமுற்றான். சற்று நேரம் சும்மா இருந்தான்! சுற்றுமுற்றும் பார்த்தபோது, படகிலிருந்து நீட்டிக் கொண்டிருந்த கழிகளும் கட்டைகளும் அவன் கண்களில் பட்டன.

"இந்தக் கட்டை என்னத் திற்கு?" என்று கேட்டான்.

"படகு அதிகம் ஆடாமல் இருப்பதற்காக."

"இதைக் காட்டிலும் படகு அதிகம் ஆடுமா என்ன? இப்போவேதான் வேண்டிய ஆட்டம் ஆடுகிறதே? எனக்குத் தலை சுற்றும் போலிருக்கிறது."

"இது ஒரு ஆட்டமா? ஐப்பசி, கார்த்திகையில் வாடைக் காற்று அடிக்கும் போதல்லவா பார்க்க வேண்டும்?"

கரையிலிருந்து பார்த்தால் கடல் அமைதியாகத் தகடு போல் இருப்பதாகத் தோன்றியது. ஆனால் உண்மையில் அவ்விதம் இல்லையென்பதை வந்தியத்தேவன் கண்டான். நுரையில்லாத அலைகள் எழும்பி விழுந்து கொண்டுதானிருந்தன. அவை அப்படகைத் தொட்டில் ஆட்டுவது போல் ஆட்டிக்கொண்டிருந்தன.

"பெருங்காற்று அடிக்கும் போது இந்தக் கட்டை என்ன ஆகும்?"

"எவ்வளவு பெரிய காற்று என்பதைப் பொறுத்தது. சாதாரணமாய்ப் பெருங்காற்று அடித்தாலும் இந்தக் கட்டை படகைக் கவிழாமல் நிறுத்தி வைக்கும். ஒருவேளை சுழிக்காற்று அடித்து, படகு கவிழ்ந்து விட்டால் இந்தக் கட்டையைப் படகிலிருந்து அவிழ்த்து விட்டுவிடாமல், அதைப் பிடித்துக் கொண்டு உயிர் தப்புவதற்குப் பார்க்கலாம்."

"ஐயோ! காற்றில் படகு கவிழ்ந்துவிடுமா, என்ன?"

"சுழிக்காற்று அடித்தால் பெரிய பெரிய மரக்கலங்கள் எல்லாம் சுக்கு நூறாகிவிடும். இந்தச் சிறிய படகு எம்மாத்திரம்?"

"சுழிக்காற்று என்றால் என்ன?"

"இதுகூடத் தெரியாதா? ஒரு பக்கமிருந்து அடிக்கும் காற்றும், இன்னொரு பக்கத்திலிருந்து அடிக்கும் காற்றும் மோதிக் கொண்டால் சுழிக்காற்று ஏற்படும். இங்கே தை, மாசி மாதங்களில் 'கொண்டல் காற்று' அடிக்கும். அப்போது அபாயமே இல்லை. சுலபமாகக் கோடிக்கரைக்கும் இலங்கைக்கும் போய் வரலாம். 'இரவுக்கிரவே போய்விட்டுத் திரும்பலாம். வைகாசியிலிருந்து 'சோழகக் காற்று' அடிக்கும். சோழகக் காற்றில் இங்கிருந்து இலங்கை போவது கொஞ்சம் சிரமம். இப்போது சோழகக் காற்றுக்கும் வாடைக்காற்றுக்கும் இடையில் உள்ள காலம். கடலில் சில சமயம் காற்றும், காற்றும் மோதிக் கொள்ளும். மத்தினால் தயிர் கடைவது போல் காற்று கடலைக் கடையும். மலை போன்ற அலைகள் எழும்பி விழும். கடலில் பிரம்மாண்டமான பள்ளங்கள் தென்படும்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மனக்கோட்டை மண்கோட்டை ஆச்சே



"பாவிகளே நீங்கள் எல்லாம் அழிந்து போவீர்கள்" என்று கூறிய ராமனை பணியாட்கள் தூக்கி தெருவில் போட்டார்கள்.

அவமானத்துடன் சென்றான் ராமன். ஒரு சில மாதங்கள் கழித்து ஒருநாள் நீண்ட தாடியும் மீசையுமாய் ஒரு புதியவர் அரசரை நிறைய பொருட்களை பரிசாக கொடுத்து விட்டு சொன்னார். "அரசரே நான் ஒவ்வொரு நாளும் தங்களுக்கு ஐம்பது தங்ககாசுகள் தருவேன்.

பதிலாக தாங்கள் அரசவையில் இருக்கையில் தங்கள் காதில் சில நிமிடங்கள் ரகசியம் ஓத எனக்கு அனுமதி அளிக்க வேண்டும்" அரசரோ, "ஆகட்டும். அதிலென்ன கஷ்டம் எனக்கு" என்று பதில் மொழிந்தார். மறுநாள் மந்திரிகள் புடைசூழ மன்னர்

அரசவையில் இருந்த போது, அந்த புதியவரை பார்த்து கிட்ட வாரும் என ஜாடை காட்டினார். அருகில் சென்று அவர் அரசர் காதில், "இன்று சிறப்பான நாள். கதிரவன் பளிச்சென்று ஒளி வீசி கொண்டிருக்கிறான்". என்றார் புதியவர். கிசுகிசுத்து கொண்டே அடிக்கடி ராஜாவை நோக்கினார்.

தங்க காசுகளை அரசரின் பையில் ரகசியமாக போட்டுவிட்டு சென்றார். முதன்மை மந்திரியான ராஜா அவர் பின்னால் பயபக்தியுடன் சென்று கேட்டான். "அரசரிடம் தாங்கள் சொன்ன தென்னவோ? என்னை அடிக்கடி நோக்கியது ஏன் கொஞ்சம் சொல்லுங்களேன்." இதைத்தான் அந்த புதிய மனிதரும் எதிர்பார்த்தார். அந்த மாறுவேடத்தில் இருப்பது ராமன் தான்.

"அரசருக்கும் எனக்கும் ஆயிரம் இருக்கும். அதையெல்லாம் தங்களுக்கு சொல்ல முடியுமா?" என்றான் அவன். ராஜாவின் பயம் பன்மடங்கானது. மண்டி போட்டுவிட்டான். ராமனின் கையில் நூறு தங்கக்காசுகளை திணித்தான். "மாலையில் மேலும் நூறு காசுகளை தருவேன். ரகசியத்தை மட்டும் சொல்லிவிடுங்கள்" என்று கெஞ்சினான். மிகவும் தயக்கம் காட்டியவாறு நடித்து பின் ராஜாவின் காதில் ராமன், "நீர் நிறைய லஞ்சம் வாங்குவதாக அரசரிடம் நிறைய பேர் புகார் அளித்துள்ளனர்.

அதை விசாரிப்பதற்கு அரசர் என்னை நியமித்துள்ளார்," என்று ஒரே போடாக போட்டான். பயந்து போன ராஜா, "இன்று அரசரிடம் என்ன கூறினீர்கள்" என கேட்டான். "இன்னும் விசாரித்து கொண்டுள்ளதாக கூறியிருக்கிறேன்" என்றான் ராமன்.

"இந்த ஏழையின் மீது கருணை காட்டுவார் ஐயா! இன்னும் ஆயிரம் பொற்காசுகளை தருகிறேன்" என்று கெஞ்சிய ராஜாவிடம். "பார்க்கலாம்" என்று சொல்லிவிட்டு நகர்ந்தான் ராமன். மறுநாள் வந்தது. ராமன் அரசரின் காதுக்குள் கிசுகிசுத்தான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் வெற்றியடையவே ஒன்றிணைகிறோம்.
ஒரு முறையாவது நாம் கற்றுக்கொள்ள ஒருங்கிணைவோம். – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வலிமையற்ற போராட்டங்களை தவிர்த்துக் கொள்ளுங்கள்

எங்கள் தமிழர் தாயகம் தியாகம் நிறைந்த – வீரம் செறிந்த – அறிவு மிகுந்த – ஆத்மீகம் மலிந்த தேசம்.

அதனாலன்றோ எத்தனையோ இளைஞர்கள் தம் பெற்றோரை, சகோதரர்களை, உறவுகளை துறந்து போர்க்களம் சென்றனர்.

தவிர, ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் விடுதலைப் போராட்டத்தை நேசித்தனர்.

அதன் விளைவாக தமிழர்களின் விடுதலைப் போராட்டம் உன்னதம் பெற்றது.

என்ன செய்வது வஞ்சகத்தனங்கள் உடனிருந்து அழித்துவிட, எல்லாமும் இழந்து வெறுமையாயிற்று.

ஆனாலும் இன்றும் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்த முடியாது என்பதில் எதிரிகூட உறுதியாக இருப்பது தான் எங்கள் போராட்டத்தின் மேன்மை எனலாம்.

ஆயுதப் போராட்டம் மட்டுமல்ல, அகிம்சைப் போராட்டத்திலும் நாங்கள் காந்தி தேசத்துக்கு சளைத்தவர்கள் அல்ல என்பதை தியாகி திலீபனின் அகிம்சை வேள்வி அறுதியிட்டுக் கூறியது.

கூடவே ஒவ்வொரு அகிம்சைப் போராட்டத்திலும் நம் மக்கள் நடத்திய ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், கடையடைப்புகள் எத்தனை எத்தனை.

அந்த அகிம்சைப் போராட்டங்களில் மக்களின் எழுச்சி கண்டு வியக்காதார் யார் உளர்.

இவ்வாறாக ஆயுதப் போராட்டத்திலும் அகிம்சைப் போராட்டத்திலும் மக்கள் எழுச்சியை ஏற்படுத்திய நம் இன விடுதலைப் போராட்டம் 2009 உடன் முடிவுற்றுப் போக, தேர்தல் அரசியலுக்குள் நம் இனம் வீழ்ந்துற்றது.

பாராளுமன்றப் பதவிக்காக கன்னை பிரிந்த நம் தமிழ் அரசியல் தரப்புகள்; பொய்யான வாக்குறுதிகளை வழங்கி தமிழ் மக்களை ஏமாற்றினர்.

என்ன செய்வது ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் படைப்பாளிகளை நம்பி வாக்களித்த சிங்கள மக்களின் தலைவிதி நம் தமிழ் மக்களுக்கும் இருந்தது. நாமும் நம்பி வாக்களித்தோம். காலம் கடந்தது தவத்திரு செல்லப்பா சுவாமிகள் கூறிய; **எல்லாம் செப்படி வித்தை** என்பது இதைத்தான் என்று நம் மக்கள் உணர்ந்து கொண்டனர். மெல்ல மெல்ல விலகத் தொடங்கினர்.

இப்போது எந்தத் தமிழ் அரசியல் தரப்பாலும் ஆயிரம் பேரைக் கூடத் திரட்டி ஆர்ப்பாட்டம் செய்ய முடியாத அளவுக்கு நிலைமை வந்துவிட்டது

மாறாக ஐந்து பேர், பத்து பேர் கூடி போராட்டம் நடத்துகின்ற துர்ப்பாக்கிய நிலைமை உருவாயிற்று.

அன்புக்குரிய தமிழ் அரசியல்வாதிகளே! முடிந்தால் ஆட்சியாளர்கள் திகைக்கும் வகையில் மக்களைத் திரட்டி பேரணி நடத்துங்கள்.

இதைவிடுத்து ஒரு சிலருடன் போராட்டம் நடத்தும்போது, அதன் மறுபக்கம் எங்கள் வலிமை மிகுந்த போராட்டம் பலமிழந்ததாகக் கருதப்படும்.

இஃது எங்களின் விமுக்காட்டை – எங்களின் ஒற்றுமையீனத்தை சுட்டுவதாகவே இருக்கும்.

# யாழில் எதிர்வரும் இரண்டு வாரங்கள் நுளம்பு கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனம்

## யாழ். பிராந்திய சுகாதார பணிப்பாளர் கேதீஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 25ஆம் திகதி முதல் யாழில் இரண்டு வாரங்களை நுளம்பு கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப்படுத்தி யுள்தாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடாத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் தற்போது டெங்கு நோய் பூரண கட்டுப்பாட்டில் இருக்கின்றது. ஆனால் தற்போது ஆரம்பித்திருக்கின்ற வடக்குக் கிழக்கு பருவப்பெயர்ச்சி மழைக்குப் பின்னர் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுவாக யாழ்ப்பாண மாவட்டத்தில் வடகீழ் பருவப்பெயர்ச்சிமழை ஆரம்பித்த பின்னர் ஒக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி மற்றும் பெப்ரவரி ஆகிய ஐந்து மாதங்களில் பொதுவாக டெங்கு நோயின் பரவல் அதிகமாக இருக்கும்.

இந்த வருடத்தைப் பொறுத்தவரையில் இன்று வரையில் யாழ் மாவட்டத்தில் 1,836 நோயாளர்கள் டெங்கு நோயுடன் இனங்காணப்பட்டு இருக்கின்றார்கள். இதில் ஒரு இறப்பும் ஏற்பட்டிருக்கின்றது.

இந்த வருடத்தில் ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய நான்கு மாதங்களில் அதிகமான நோயாளர்கள் இனங்காணப்பட்டு இருந்தார்கள். பின்னர் ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் ஏறத்தாழ 120, 130 நோயாளர்கள் தான் இனங்காணப்பட்டு இருக்கின்றார்கள். தற்போதைய சூழ்நிலையில் இந்த நோய் இங்கு கட்டுப்பாட்டில் இருக்கின்றது.

கடந்த வருடம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3,460 நோயாளர்கள் இனங்காணப்பட்டதுடன் 10 இறப்புகளும் இடம்பெற்றிருந்தன. எனவே கடந்த வருடத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் குறைவாகவே காணப்படுகிறது.

எனவே இந்த வடக்கு கிழக்கு பருவபெயர்ச்சி மழை ஆரம்பித்து இருக்கின்ற காரணத்தினால், நாங்கள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எதிர்வரும் காலங்களில் டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்துவதற்காக இம் மாதம் 25 ஆம் திகதி முதல் இரண்டு வாரங்களை நுளம்பு கட்டுப்பாட்டு வாரமாக பிரடனப்படுத்தி இருக்கின்றோம். அதனை ஒருங்கிணைக்கின்ற வகையிலே மாவட்ட மட்டத்தில் கடந்த 15 ஆம் திகதி யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் டெங்கு தடுப்பு செயலணி கூட்டம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தின் போதே இந்த இரண்டு வாரங்களையும் டெங்கு கட்டுப்பாட்டு வாரமாக பிர கடனப்படுத்துவது என தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

இந்த வாரத்தில் பிரதேச மட்ட டெங்கு தடுப்பு செயலணி கூட்டங்கள் பிரதேச செயலாளர்கள் தலைமையில் இடம்பெறும். இந்தக் கூட்டத்தின் போது ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் எவ்வாறு இந்த டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்பது பற்றி தீர்மானிக்கப்படும். இதற்கு அடுத்த கட்டமாக இந்த வாரத்திலே கிராமிய மட்ட டெங்கு தடுப்பு செயலணி கூட்டங்கள் இடம்பெற்று கிராம மட்டத்தில் எவ்வாறு இதனை கட்டுப்படுத்துவது என்பது பற்றி தீர்மானிக்கப்படும்.

இந்த இரண்டு வாரத்திலும் பொதுமக்கள் நுளம்பு உற்பத்தியாகின்ற இடங்களை சிரமதானத்தின் மூலம் சுத்திகரிக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றோம் என தெரிவித்துள்ளார். (ம-7.33)

# க.பொ.த உயர்தர பரீட்சை தொடர்பில் பரீட்சை ஆணையாளர் விரைவில் அறிக்கை

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

(கொழும்பு)

கல்வி பொதுத் தராதர உயர் தர பரீட்சையை ஒத்திவைப்பதற்காக முன்வைக்கப்பட்டிருக்கும் பிரேரணைகளை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் கவனத்துக்கு கொண்டு வந்திருக்கிறோம். மிக விரைவில் அது தொடர்பாக ஆணையாளர் அறிக்கை ஒன்றை வெளியிடுவார் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சையை ஒத்திவைக்க வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதுதொடர்பாக கருத்து தெரிவித்த எதிர்க்கட்சி உறுப்பினர் ரோஹினி கவிரத்ன கூறுகையில்,

பரீட்சைகள் கால அட்டவணையில் மறுசீரமைப்புகளை கொண்டு வர வேண்டும். பிள்ளைகளின் உரிமைகளை இல்லாமல் செய்யக் கூடாது.

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட கஷ்ட பிரதேசங்களின் சில பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளின் இன்னும் பாடத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை.

அத்துடன் 2023 ஆம் ஆண்டில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு இரண்டரை வருட உயர்தர வகுப்பில் கற்கும் காலமும் கிடைக்கவில்லை. நவம்பர் மாதத்தில் பரீட்சையை நடத்த நடவடிக்கை எடுக்கும் போது, ஆசிரியர்கள் குறுகிய காலத்தில் பாடங்களை முடிக்கவே முயற்சிப்பர். அதனால் மாணவர்களுக்கு அநீதி ஏற்படுகிறது.

அதேபோன்று இரண்டாவது முறையாக பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள், பாடப் பிரிவுகளை மாற்றும் மாணவர்களுக்கு பரீட்சைக்கு தயாராக போதுமான காலம் இல்லை.

இதனால் நவம்பர் 27 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள பரீட்சையை நடத்தாது பாடசாலை மூன்றாம் தவணை காலத்தை ஜனவரி 19ஆம் திகதியுடன் நிறைவு செய்து உயர்தரப் பரீட்சையை ஜனவரி 22 முதல் பெப்ரவரி 17 வரையில் நடத்த முடியும். அப்போது பெப்ரவரி 19 ஆம் திகதி முதல் பாடசாலை முதலாம் தவணையை ஆரம்பிக்க முடியும்.

அதேபோன்று மே மாதத்தில் பெறுபேற்றை வழங்கவும் முடியுமாக இருக்கும். அவ்வாறு செய்தால் அடுத்த வருடத்தின் பரீட்சையை ஒக்டோபரில் நடத்தவும் முடியுமாக இருக்கும்.

இதனால் பரீட்சையை ஜனவரி 22ஆம் திகதி வரையில் ஒத்திவைக்க முடியுமானால் அந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகாணலாம் என்றார். (ம-7)

# படகு கவிழ்ந்ததில் இளைஞன் உயிரிழப்பு

## திருமலையில் சம்பவம்

(திருகோணமலை)

திருகோணமலை குச்சவெளி பிரதேசத்தில் செந்தூர் பகுதியில் படகு கவிழ்ந்ததில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீன் பிடிப்பதற்காக செந்தூர் மதுரங்குடா கலப்பு பகுதிக்கு இரு இளைஞர்கள் சென்றுள்ளனர். அப்போது படகு கவிழ்ந்ததில் குறித்த இளைஞர் உயிரிழந்ததுடன் மற்றவர் மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 19 வயதுடைய சுதேந்திரன் ஜனுஷன் என்ற இளைஞர் ஆவார்.

குறித்த இளைஞனின் சடலம் விசாரணையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூரின் இனம் சாரா அரசியல் ஒன்பதாவது குடியரசுத் தலைவராக இலங்கை வம்சாவளித் தமிழர் தர்மன் தெரிவு

03

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



7.வீ கிம் வீ (Wee Kim Wee) சிங்கப்பூரின் நான்காவது அதிபராக 1985 முதல் 1993 வரை (7 வருடம் 364 நாட்கள்) பதவி வகித்தவர்.



வீ கிம் வீ (Wee Kim Wee)
சிங்கப்பூரின் நான்காவது அதிபர் (1985-1993)


குடும்ப வறுமை காரணமாக படிப்பை பாதியிலேயே விட்டு பின்னர் பெருமைக்குரிய முனைவர் பட்டம் பெற்றவர். 1985 ஒகஸ்ட் 30 ஆம் திகதி, சிங்கப்பூரின் நான்காவது அதிபராக நாடாளுமன்றம் அவரை தேர்ந்தெடுத்தது. சிங்கப்பூரர்களால் "மக்கள் அதிபர்"•என்று அன்போடு அழைக்கப்பட்டவர். இவர் 1989இல் இரண்டாவது முறையாகவும் நாடாளுமன்றத்தால் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

8. ஓங் டெங் சியோங் (Ong Teng Cheong) ஒரு சிங்கப்பூர் அரசியல்வாதி, கட்டிடக் கலைஞர் மற்றும் தொழிற்சங்கத் தலைவர் ஆவார். அவர் 1993 மற்றும் 1999 இற்கு இடையில் (5 வருடம் 364 நாட்கள்) சிங்கப்பூரின் ஐந்தாவது ஜனாதிபதியாக இருந்தார். பிரபலமான ஒரு நாட்டில் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஜனாதிபதி ஆவார். இவர் அதிபர் தேர்தலில் 952,512 (58.69%) வாக்குகள் பெற்றிருந்தார்.



ஓங் டெங் சியோங்
(Ong Teng Cheong)
சிங்கப்பூரின் ஐந்தாவது ஜனாதிபதி (1993-1999)

9. எஸ். ஆர். நாதன் என்று அழைக்கப்படும் செல்லப்பன் ராமநாதன் என்பவர் சிங்கப்பூரின் ஆறாவது அதிபர்.இவர் 1999 செப்டம்பர் 1 ஆம் திகதி தொடங்கி 2005 ஒகஸ்ட் 18 ஆம் திகதி வரை சிங்கப்பூர் குடியரசுத் தலைவராகப் பதவி வகித்து வந்தவர். பின்னர் 2005 ஒகஸ்ட் 18 ஆம் திகதி மறுபடியும் தேர்வு செய்யப்பட்டார். இவர் இரு ஜனாதிபதி தேர்தல்களிலும் மக்களால் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார். இவரின் அதிபர் பதவிக் காலம் 2011 ஆகஸ்டு 31ஆம் திகதி முடிவடைந்தது. இவர் 11 வருடம் 364 நாட்கள் அதிபராக இருந்தது குறிப்பிடத்தக்கது.



எஸ். ஆர். நாதன்
சிங்கப்பூரின் ஆறாவது அதிபர்
(1999-2011)

இவர் சிங்கப்பூரில் நீண்ட காலம் சேவை செய்த அதிபர் எனும் பெருமையையும் பெறுகிறார். 31 ஜூலை 2016 இல் இவர் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டார். சிங்கப்பூர் பொது மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். 2016 ஒகஸ்ட் 22 ஆம் திகதி, அவரின் 92 வயதில் உயிர் துறந்தார்.

10. டோனி டேன் கெங் யம் (Tony Tan Keng Yam) சிங்கப்பூர் நாட்டின் 7 ஆவது அதிபராக 2011 ஒகஸ்ட் மாதம் தெரிவு செய்யப்பட்டார். இவர் 1995 முதல்



2003 வரை துணைப் பிரதமராக இருந்துள்ளார். சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் இயற்பியல் பட்டம் பெற்றவர் டான். மேலும் மாசசூசட்ஸ் தொழில்நுட்பக் கழகத்தில் முதுநிலைப் படிப்பை முடித்தவர். அடிலைட் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர்.

சிங்கப்பூர் முதலீட்டுக் கழக நிறுவனத்தில் துணைத் தலைவராக பதவி வகித்துள்ளார். மேலும் சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் தலைவராகவும் இருந்துள்ளார். இவர் சீன வம்சாவளியினர் ஆவர். இவர் அதிபர் தேர்தலில் 745,693 (35.20%) வாக்குகள் மட்டுமே பெற்று தேர்தலில் வெற்றியடைந்தார். இவர் 5 வருடம் 364 நாட்கள் அதிபராக இருந்தது குறிப்பிடத்தக்கது.

11. அதன்பின் சிறிது காலம் (13 நாட்கள்) ஜனாதிபதி ஆலோசகர்கள் சபையின் தவிசாளர் ஜோசப் யுபராஜ் மானுவல் பிள்ளை சிங்கப்பூரின் பதில் அதிபராக பணியாற்றினார்.

2001ஆம் ஆண்டு முதல் 2004 வரை சிங்கப்பூர் அதிபருக்கு ஆலோசனைகளை வழங்கும் குழுவின் உறுப்பினராக பணியாற்றியவர். 2005ஆம் ஆண்டு முதல் தற்போது வரை இக்குழுவின் தலைமை ஆலோசகராக பணியாற்றிவருகிறார். சிங்கப்பூர் நாட்டின் சட்டங்களின்படி, அதிபர் நாட்டில் இல்லாத போது அவரது அலுவலகப் பணிகளை அதிபரின் தலைமை ஆலோசகர்தான் கவனிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

12. அலிமா யாக்கோப் என்று அழைக்கப்படும் அலிமா பிந்தி



அலிமா பிந்தி யாக்கோபு
(Halimah binti Yacob)
சிங்கப்பூரின் எட்டாவது குடியரசுத் தலைவர்
(2017-2023)

யாக்கோபு (Halimah binti Yacob) என்பவர் சிங்கப்பூர் அரசியல்வாதியும் தற்போதைய (2023.09.13 வரை) சிங்கப்பூர் குடியரசுத் தலைவரும் ஆவார். இவர் எட்டாவது குடியரசுத் தலைவர் ஆவார். சிங்கப்பூர் வரலாற்றில் முதல் பெண் அதிபர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். சிங்கப்பூரில் வழக்கறிஞர் தொழில் புரிந்தவர். சிங்கப்பூரை ஆட்சி செய்து வரும் மக்கள் செயல் கட்சியின் உறுப்பினரும் ஆவார். இவர் ஜனவரி 2013 முதல் ஒகஸ்ட் 2017 வரை சிங்கப்பூர் 9 ஆவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராகவும் சேவை செய்தவர்.

**சிங்கப்பூர் பெயர் காரணம்**

சிங்கப்பூர், சிங்கம் + ஊர் = சிங்கப்பூர் அதாவது சிங்கத்தின் ஊர் என்ற தமிழ் பொருளைக் கொண்டது. சிங்கப்பூர் என்ற பெயர் சிங்கப்பூரா என்ற மலாய்ச் சொல்லில் இருந்து மருவியதாகவும் கூறப்படுகிறது. மலாய் சொற்களான சிங்கா (சிங்கம்) மற்றும் பூரா (ஊர்) சேர்ந்து சிங்கப்பூரா என்று அழைக்கப்படுகிறது. மலாய் வரலாற்றின் படி 14ஆம் நூற்றாண்டு சுமாத்திரா மலாய் இளவரசர் நீல உத்தமன், ஒரு கடும் புயலின் போது இந்தத் தீவில் ஒதுங்கினார். அப்போது அவர் சிங்கம்போல ஒரு மிருகத்தைப் பார்த்து, சிங்கம் என்று தவறுதலாக நினைத்துக் கொண்டு சிங்கபூரா என்று அழைத்ததாக ஒரு வரலாற்றுக் கதை உண்டு.

**சிங்கப்பூர் புவியியல்**

சிங்கப்பூர் அல்லது சிங்கப்பூர் குடியரசு என்பது தென்கிழக்காசியாவில் உள்ள ஒரு தீவு நாடு. மலேசியத் தீபகற்பத்தின் தென் முனையில் அமைந்துள்ளது. சிங்கப்பூர் தீவை ஜொகூர் நீரிணை, மலேசியாவில் இருந்து பிரிக்கிறது.

தெற்கில் சிங்கப்பூர் நீரிணை இந்தோனேசியாவின் ரியாவு தீவுகளைப் பிரிக்கின்றது. சிங்கப்பூர் பெரிதும் நகரமயம் ஆன நாடாகும். மிகக்குறைவான அளவிலேயே மழைக்காடுகள் உள்ளன. நிலச் சீரமைப்பு மூலம் கூடுதலான நிலங்கள் வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்டுள்ளன.

கி.பி. 2ஆம் நூற்றாண்டில் மனிதக் குடியேற்றம் தொடங்கிய நாளிலிருந்து சிங்கப்பூர் பல உள்ளூர் இராச்சியங்களின் பகுதியாக விளங்கி வந்துள்ளது.

1819ஆம் ஆண்டில் ஜொகூர் சுல்தானகத்தின் அனுமதியுடன் பிரித்தானிய கிழக்கிந்திய நிறுவனம் சிங்கப்பூரைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு புகுந்து...

ஸில் முறைபிடப்பட்டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை அதி காலை இரண்டு மணியளவில் அல் வாய், கவிஞர் செல்லையா வீதியில் உள்ள வீடு ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் உறக்கத்திலிருந்தவர்கள் சத்தம் கேட்டு விழித்தபோது வீட்டுக் குள் வாளுடன் ஒருவர் நின்றுள்ளார். இதனை அடுத்து வீட்டில் இருந்தவர் அலறல்சத்தம்போட்ட நிலையில் வாளு டன் நின்ற கொள்ளையர் அங்கிருந்த பெறுமதியான தொலைபேசியை கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது. (ம-7,60)

## திலீபனின்...

அமெரிக்காவில் நடைபெறும் ஐக் கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்பதற் காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு சென்றுள்ள நிலையில், இங்கு திருகோணமலையில் பட்டப்பகலில் பொலிஸார் முன்னிலையில் குண்டர் கள், தமிழர்கள் மீது மிலேச்சத்தன மான முறையில் தாக்குதல் நடத்திச் சண்டித்தனம் காட்டியுள்ளார்கள். இந் தச் சம்பவம் தொடர்பில் அரசு வெட்கித் தலைகுனிய வேண்டும்.

"திருகோணமலையில் தியாக தீபம் திலீபனை நினைவேந்தும் ஊர்தி மீது தாக்குதல் மேற்கொண்ட குண்டர் குழு, அந்த ஊர்தியில் பயணித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப் பினருமான செல்வராசா கஜேந்திரன் மீதும், அவரின் கட்சியின் செயற்பாட்டா ளர்கள் மீதும் மிலேச்சத்தனமான முறையில் தாக்குதலை நடத்தி யுள் ளது. இந்தக் கொடூர சம்பவத்தை நாம் மிகவும் வன்மையாக்க் கண்டிக்கின் றோம்.

தியாகி திலீபனின் தியாகம் உன் னதமானது. அவரின் தியாகத்தை எவரும் கொச்சைப்படுத்த முடியாது. அவரை நினைவேந்துவதை எவரும் தடுக்க முடியாது.

பொலிஸார் முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந் திரனைச் சுற்றிவளைத்து அந்தக் குண்டர்கள் கடுமையாகத் தாக்கி யுள்ளனர். பாராளுமன்ற உறுப்பின ருக்கே பாதுகாப்பு இல்லாத இந்த நாட் டில் மக்களின் பாதுகாப்பு எப்படி இருக்கும் என்பதைச் சர்வதேச சமூ கம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தத் தாக்குதல் நடத்தியவர் களைக் கைது செய்வது மட்டுமன்றி அவர்களைத் தூண்டிவிட்டவர்களை யும் கைது செய்ய வேண்டும். அதே வேளை, தாக்குதல் நடைபெற்றபோது அந்த இடத்தில் வேடிக்கை பார்த்த பொலிஸாருக்கு எதிராகவும்நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார். (ம-7)

## சிறுமியின்...

கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன் இது தொடர்பில் துண்டு பிரசுரம் ஒன்றும் அவரால் வெளியிடப் பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின் றது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில்,

கடந்த 25.08.2023ஆம் திகதியன்று வவுனியா, பாரதிபுரம் பகுதியில் 2 வயது சிறுமி நீர்த்தொட்டியில் தவறிவிழுந்து இறந்தார். இறந்த சிறுமியின் உடல் இராசேந்திரங்குளம் இந்து மயானத் தில் அடக்கம் செய்யப்பட்டது. இருப் பினும் கடந்த 05.09.2023 அன்று சிறுமி யின் உடல் இனந்தெரியாத நபர்களால் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான உண்மையான தகவல் தெரிந்தவர்கள் கீழ்கண்ட தொலைபேசி இலக்கத்திற்கு தகவல் வழங்கினால் 10 இலட்சம் சன்மான மாக வழங்கப்படும்.

சிறுமியின் சடலத்தை எடுத்தவர் கள் மீள கையளிக்கின்றபோது 20 லட் சம் சன்மானம் வழங்கப்படும். இதனை தாழ்மையாக கேட்கின்றேன். எங்களது பிள்ளையின் அங்கம் வேண்டும் என வும் குறித்த சிறுமியின் அம்மம்மா தெரி வித்துள்ளார்.

சிறுமியின் சடலம் தொடர்பான தக வல் தெரிந்தவர்கள் 076 - 609 1158 அல்லது 075 - 498 6953 என்ற தொலை பேசி இலக்கத்திற்கு தெரியப்படுத்து மாறும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த சிறுமின் சடலத்தை காணவில்லை என நெளுக் குளம் பொலிஸில் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக் கது. (ம-7,250)

## அதிகார...

இந்தியப்பெருங்கடலில் தனது செல் வாக்கை நிலைநிறுத்த பெரும் வல் லரசுகள் முயற்சித்து வரும் நிலையில், அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திரத்தில் இடம்பெறும் எந்தவொரு இராணுவ ஒத்திகைக்கும் இலங்கை ஆதரவளிக்காது எனவும், அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் நடைபெற்ற இந்திய - பசிபிக் தீவுகள் உரையாடல் நிகழ்ச்சி யில் சிறப்புரை ஆற்றியபோதே ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க இதனை தெரிவித்துள்ளார்.

இந்தியப் பெருங்கடலில் உள்ள பல நாடுகள், நல்வாழ்வு மற்றும் வளர்ச்சியை சமரசம் செய்யும் பெரும் சக்திகளுக்கு இடையேயான சண்டைகளுக்கு இழுக் கப்படுகின்றன என கூறியுள்ளார்.(ம-7)

## புலிப் பயங்கர...

புலிப் பயங்கரவாத அமைப்பின் தலைவர்களில் ஒருவரான திலீபனை நினைவேந்தும் ஊர்தியைத் திரு கோணமலையில் சிங்கள மக்கள் தாக் கிச் சேதப்படுத்தியமை நியாயமானது என்றும் அவர் கூறியுள்ளார்.

அந்த ஊர்தியில் கஜேந்திரனும் பயணித்தபடியால்தான் அவரும் தாக்குதலுக்கு இலக்கானார் என்றும் அவர் மேலும் சுட் டிக் காட்டியுள் ளார்.

அதேவேளை, கஜேந்திரனும் ஒரு புலிப் பயங் கரவாதி எனச் சிங்கள மக்க ளுக்குத் தெரியும் என்றும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் வடக் குத் தமிழ் மக்கள் நிராகரித்த கஜேந் திரன், தேசியப் பட்டியல் ஊடா கவே பாராளுமன் றம் வந்தார் என் றும் விமல் வீர வன்ஸ மேலும் சுட்டிக் காட்டியுள் ளார். (ம-7)

## 78வது...

தலைமையகத் தில் ஐக்கிய நாடு களின் பொதுச் செயலாளர் வர வேற்றதோடு அத னைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் 78 ஆவது கூட்டத் தொடர் ஆரம் பமானது. (ம-7)

## மிருசு...

நேற்றைய தினம் மீட்கப்பட்டன.

குறித்த காணி யின் உரிமை யாளர் காணியை சுத்தம் செய்யும் போது குறித்த வெடி பொருட்கள் அவதானிக்கப் பட்டது. அதனையடுத்து பொலிஸா ருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இந்நிலையில் அந்த வெடிபொருட் கள் இராணுவ உதவியுடன் மீட்கப் பட்டது. (ம-7,104)

# பங்களாதேஷ் பிரதமருடன் ரணில் சந்திப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விற்கும் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவிற்கும் இடையிலான சந்திப் பொன்று ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பில் இரு தரப்புக்கும் இடையில் ஆக்கபூர்வமான கலந்துரை யாடல் இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை யின் 78வது கூட்டத்தொடர் அமெரிக்கா வின் நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நேற்று ஆரம்பமாகியமை குறிப்பிடத் தக்கது. (ம-7)

## சமந்தா...

துள்ளார்.

இந்த சந்திப்பின்போது, பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப் பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


மெகா பவர்
திகதி 19/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1590
I 21 14 15 57 71
25905

தன நிதானய
திகதி - 2023.09.19
சீட்டிழுப்பு இலக்கம் - 1272
Y 01 06 29 64 Y
31473

லக்கி 7
திகதி 19.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0068
L7 இலக்கம் 3 1
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 7 8 2 6 4 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3484
சீட்டிழுப்பு திகதி 19.09.2023
J 31 41 55 79
J 38921
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.09.19
சீட்டிழுப்பு இலக்கம் 551
மீனம் 26 36 40 46 மீனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/09/19
சீட்டிழுப்பு இலக்கம் 5242
E 8 8 8 0 5 4
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2216 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.09.19 தினம் செவ்வாய்க்கிழமை
21 41 50 61 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,643,060.40
76167 759
DLB

சனிதா
திகதி 2023.09.19 வெற்றி வாரம் 4377 வர்ணம் பச்சை
19 31 45 61 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,965,692.00
12950 404
DLB

சசிரி
வெற்றி வாரம் 378
சீட்டிழுப்பு திகதி 2023.09.19
16 37 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,362,520/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3928 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.09.19 தினம் செவ்வாய்க்கிழமை
01 06 24 30
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,565,188/-
65760 861
DLB

திகதி 19.09.2023 வெற்றி வாரம் 1392
R 17 07 44 69 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 441,839,234.20
62269 825
DLB
தொலை பேசி 011-2 333 546-47
Web: www.dlb.lk

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 2042
சீட்டிழுப்பு திகதி: 2023.09.19
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,622,320/-
14 34 38 76 Z
63673 458
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17099)

076 825 7716 (ஆகாஸ்)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378

076 097 3127

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7273)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

### பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE



யாழ் - கொழும்பு 2,900/=

வடமராட்சி - கொழும்பு 2,700/=

(17019)

T.P: 077 544 8503

## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல பாதுகாப்பு நிறுவனத்திற்கு இலங்கை மின்சார சபை சுன்னாகத்தில் வேலை செய்வதற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.
(15 வெற்றிடங்கள்)

Walking Interview
18.09.2023 தொடக்கம் 30.09.2023

இடம் : 758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல - 077 054 1323 (17149)

## A/L 2025 Online Group Classes

EM Biology, Chemistry
English Speaking
12 + Sessions/ Month
Jaffna Lecturer
(17128)

077 807 5566

## IELTS - New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes
இல. 53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (17142)

## சுற்றுலா தகவல் நிலையம்

அரச மாகாண அங்கீகாரம் பெற்ற ஒரே மையம்

மேற்படி எமது நிலையத்திற்கு சேவைகள் தரக்கூடியவர்களின் விபரங்கள் திரட்டப்படுகின்றன.

- இலங்கை முழுவதுமான பேருந்து சேவை
- அனைத்து வாகன வாடகை சேவை
- வேறு சம்பந்தப்பட்ட சேவைகள்

உங்கள் சேவைகளை பதிவு செய்ய தொடர்பு கொள்ளவும்

**சுற்றுலா தகவல் நிலையம்**
வட மாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம்
புகையிரத நிலையம், யாழ்ப்பாணம்.
0777 360 353 / 021 205 7132 (C-7288)

## காணி விற்பனைக்கு

கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரிக்கு பின்புறமாக கண்ணகை அம்மன் கோவிலிற்கு தெற்கு புறமாகவும் வெள்ளெருக்கு பிள்ளையார் கோவிலிற்கு செல்லும் வீதியில் நல்ல அயல் சூழலில் 6 பரப்பு சதுர காணி விற்பனைக்கு (2 பரப்பாகவும் கொடுக்கப்படும்) (17146)

076 654 5987

## விற்பனைக்கு

- லயன்(Lion) பொமேரியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
- வாழைக்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : (17140)

077 172 1074
077 172 6839


## கேள்வி கோரல்

## பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலய மீள் நிர்மாணப் பணி

### கட்டம் : 03

**ஆலய கட்டுமானத்திற்கான கூரை அமைத்தல்**
**(சீலிங் உடனான முழுமையான பணி)**
**திட்ட வேலைக்கான மொத்தத் தொகை :**
**ரூபா 10,000,000 (அண்ணளவாக)**

மேற்குறிப்பிட்ட வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் CIDA - C6 தரத்திலுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

ஒப்பந்தகாரர்கள் யாழ். குடாநாட்டை தளமாகக் கொண்டவர்களாக இருப்பது விரும்பத்தக்கது.

வேலைக்கான கணிய அளவீடுகள் மற்றும் தொழில்நுட்ப தரவுகள் தங்களின் விண்ணப்ப படிவத்துடன் இணைக்கப்படும்.

விண்ணப்ப படிவங்கள், மீளழிக்கப்பட முடியாத கட்டணமாக ரூபா 1000 செலுத்தி பருத்தித்துறை, 4 ஆம் குறுக்குத் தெரு, புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள திருப்பண்ட வியாபார நிலையத்தில் எதிர்வரும் 21.09.2023 தொடக்கம் 28.09.2023 வரை பெற்றுக்கொள்ளலாம்.

**அருட்பணி A.F. பெனற்**
**தலைவர், கேள்வி கோரல் குழு**
**பங்குத் தந்தை**
**புனித அந்தோனியார் ஆலயம்**
**பருத்தித்துறை.**

(C-7285)

## சேவைநலன் பாராட்டு




**திரு. சிவராஜா அனந்தராஜா**
(ஓய்வு பெற்ற செயற்பாட்டு முகாமையாளர் - இலங்கை வங்கி வடமாகாணம்)

27.01.1993 அன்று இலங்கை வங்கியில் இணைந்து பல்வேறு பதவி உயர்வுகளைப் பெற்று இலங்கை வங்கியின் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளராக பதவி வகித்து 19.09.2023 இல் ஓய்வு பெற்று 20.09.2023 இன்று தனது 60 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடும் திரு. **சிவராஜா அனந்தராஜா** அவர்கள் தனது ஓய்வு காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகிறோம்.

**வாழ்த்துவோர் :**

**உதவிப் பொது முகாமையாளரும் ஊழியர்களும்**
**இலங்கை வங்கி வடமாகாண காரியாலயம்**

(C-7290)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 19[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org